விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கலயாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 10 செவ்வாய்க்கிழமை (23.03.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 094

## யாழ்ப்பாணத்தில் கொரோனாவால் வயோதிபப் பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்ட வயோதிபப் பெண் ஒருவர் கோவிட்-19 நோயால் உயிரிழந்துள்ளார்.

இந்த தகவலை வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை அதிதீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்ட அவரிடம் முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அவர் நேற்று சிகிச்சை பலனின்றி

19

## காணாமல் ஆக்கப்பட்ட மகனை தேடிய தந்தை மரணம்



(வவுனியா)

வவுனியாவில் காணாமல் போன தனது மகனை தேடிவந்த தந்தை ஒருவர் சுகயீனம் காரணமாக நேற்று முன்தினம் மரணமடைந்துள்ளார்.

வவுனியா விநாயகபுரம்

19

## இலங்கைக்கு எதிரான ஐ.நா தீர்மானம்

# முடிவு இன்று தெரியவரும்

### வாக்கெடுப்பு இன்றுவரை ஒத்திவைப்பு

(ஜெனிவா)

இலங்கைக்கு எதிரான ஐ.நா தீர்மானத்தின் இறுதி முடிவு இன்று இரவுக்குள் தெரியவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முன்னதாக நேற்று வாக்கெடுப்பு இடம்பெறும் என தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த வாக்கெடுப்பு இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(19ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சியில் ஆண் ஒருவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி - கோவிலாக்கண்டி பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கோவிலாக்

19

## கொரோனா 5 பேர் பலி

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் ஐவர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று உறுதிப்படுத்தினார்.

அதன்படி, நாட்

19

## ராஜிதவிடம் சி.ஐ.டி விசாரணை

(கொழும்பு)

முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான

19

## வட மாகாணத்தில் நேற்று நால்வருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் நேற்று நால்வருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்றுத் திங்கட்கிழமை வட மாகாணத்தில் 294 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் செய்யப்பட்டன.

19

## சட்டத் திருத்தம் நிறைவேறினால் இரு மாதங்களுக்குள் மாகாண சபைத் தேர்தல்

### தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

"பாராளுமன்றத்தில் சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இரு

19

## மக்களின் அபிலாசைகளை அரசு படுகுழிக்குள் தள்ளியுள்ளது - சஜித்

(கொழும்பு)

அரசாங்கம், தனது பொறுப்பற்ற செயற்பாடு காரணமாக வாக்களித்த 69

19

## ஐ.நாவில் இலங்கை தொடர்பில் கடும் வாத பிரதிவாதங்கள்

### இந்தியாவின் நிலைப்பாடு தொடர்பில் கடும் எதிர்பார்ப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 46ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் ஆறு நாடுகள் முன்வைத்துள்ள யோசனை

19

## சர்வதேச அழுத்தங்களிலிருந்து படையினரை பாதுகாக்க விரைவில் புதிய சட்டம்

### அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

சர்வதேச அழுத்தங்களிலிருந்து படையினரை பாதுகாக்க அரசாங்கம் தேவையான புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தும் என அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், குறித்த புதிய விதிமுறைகள்

19


## அகழ்வுக்கு எதிராக கிளிநொச்சியில் போராட்டம்



03

**சைவமன்றம்**
சிட்னி முருகன் கோயில்.
தமிழ் கல்வி கலாசார நிலையம்

**The Saiva Manram**
Sydney Murugan Temple
Tamil Educational & Cultural Center



## அவுஸ்திரேலியா அருள்மிகு சிட்னி முருகன் ஆலய
## சிற்பத்தேர் வெள்ளோட்ட விழா



சிட்னி முருகப் பெருமானுக்குப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிற்பத்தேர் சார்வரி வருடம் பங்குனி 11ஆம் நாள் (24.03.2021) புதன்கிழமை காலை 7.00 மணியளவில் வரும் சுபவேளையில் வெள்ளோட்டம் விட இறைவன் திருவருள் கூடியுள்ளது.



சிற்பத்தேர் நிர்மாணிப்பு :
விஸ்வப் பிரம்மஶ்ரீ, ரதகலாசூரி, ரதகலஞானி
ஸ்தபதி செல்லையா பாலச்சந்திரன்
ஆச்சாரியார் குழுவினர்,
ஶ்ரீ காளிகா சிற்பாலயம், புத்தூர்,
யாழ்ப்பாணம், இலங்கை.

வெள்ளோட்ட விழாவை முன்னிட்டு தெல்லிப்பழை ஶ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில். தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் பாராட்டு விழா நடைபெறவுள்ளது. ஸ்தபதி செ. பாலச்சந்திரன் அவர்களும் அவரது குழுவினர்களுக்கும் கௌரவிப்பு நிகழ்வு இன்று (23.03.2021) செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இந்த கௌரவிப்பு நிகழ்வில் பங்குபற்றி இறையருள் திருவருள் பெறுமாறு.
சிட்னி முருகன் ஆலய நிர்வாகக் குழுவினர் வேண்டிக் கொள்கின்றோம்.

(6292)

The Saiva Manram ABN No : 17 612 793 471
217 Great Western Highways, Mays Hill, NSW 2145, Australia,
Phone : + 61 2 9687 1695 Email : fsmthullai@gmail.com
Websit : www.sydneymurugan. org.au

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்கத்தின் அங்கத்தவரும் மத்திய
சித்தமருந்தகம், பருத்தித்துறை மருத்துவருமாகிய
Dr. க. ஜங்கரன் அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் கந்தையா**
**கணபதிப்பிள்ளை**

அவர்களின் பிரிவுத்துயரில் பங்கெடுப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(C-1724)

**அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம் – இலங்கை**

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## மணிவிழா வாழ்த்து




செல்வி
**புஸ்பலதா**
**வேதநாயகம்** [ SLTS - 1]

சேவைக்காலம்
யா / ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை
29.11.1989 - 16.01.2014
யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் பாடசாலை
17.01.2014 - 05.03.2014
யா / சுதுமலை வடக்கு தமிழ் கலவன் பாடசாலை
06.03.2014 - 15.03.2018
யா / மயிலிட்டி றோ.க.த.க பாடசாலை
16.03.2018 - 13.03.2021

அகவை அறுபதில் கால்பதித்து மணிவிழா
காணும் ஆசிரியை சிறப்பாக வாழ வாழ்த்துகின்றோம்.

(6288)

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்**
**யா/மயிலிட்டி றோ.க.த.க. பாடசாலை**

# மரண அறிவித்தல்



திரு. **ஆறுமுகம்**
**ஈஸ்வரகுமாரன்** ( ஈசன் E.S.P )
( கஜமுகன் ஹாட்வெயார் களஞ்சிய முகாமையாளர் )

**தோற்றம் : 1976.12.31 மறைவு : 2021.03.21**

காரைநகர், பாலக்காட்டைப் பிறப்பிடமாகவும் இல. 48/1, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து ஆறுமுகம் ஈஸ்வரகுமாரன் நேற்று முன்தினம் (21.03.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் பராசக்தி தம்பதியரின் அன்பு மகனும் பத்மசோதிநாதன் (சோதி) - நவநீதராணி தம்பதியரின் அன்பு மருமகனும் சுதர்சினியின் (சுதா) அன்புக் கணவரும் லிஷான், சுகந்தினி (யா/யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), லிஷாலினி ஆகியோரின் அன்புத் தந்தையும் அருட்செல்வி, காலஞ்சென்ற நிர்மலகுமார், சத்தியராணி, மேனகா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற ஆனந்தராசா, குகேஸ்வரன், சுப்பிரமணியம், ஜெயதர்சன், ஜெயதர்சினி, சிவதர்சினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இல. 48/1, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் இன்று (23.03.2021) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் கிரியைகள் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(C-1786)

அம்மன் வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
077 691 3239
தகவல்:
குடும்பத்தினர்

# சூடுபிடிக்கும் ஜெனிவா விவகாரம்

# இலங்கை மீதான வாக்கெடுப்பு ஒத்திவைப்பு

(ஜெனிவா)

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பில் நேற்றைய தினம் முன்னெடுக்கப்படவிருந்த வாக்கெடுப்பு இன்றுவரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.**

ஜெனிவாவில் தற்பொழுது நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானம் குறித்து நேற்றைய தினம் வாக்கெடுப்பு நடத்தப்படவிருந்தது.

எனினும் நிகழ்ச்சி நிரலில் ஏற்பட்ட குழப்ப நிலைமைகளினால் இந்த வாக்கெடுப்பு இன்று வரையில் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட உள்ள தீர்மானத்திற்கு ஆதரவாக அதாவது இலங்கைக்கு எதிராக பல நாடுகள் வாக்களிக்கக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாக ஜெனிவா வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில்குற்றச் செயல்களுக்கு பொறுப்புக் கூறுதல் கிரமமாக்கப்பட வேண்டுமென வும் மனித உரிமை நிலைமைகள் கண்காணிக்கப்பட வேண்டுமனவும் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-4)

## அரபுத் தலைவர்களுக்கு பறந்த அழைப்புக்கள்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் அரபுத் தலைவர்களுக்கு தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டுள்ளனர்.


இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் செயலாளருக்கும், பஹ்ரைனின் பிரதி மன்னர் சல்மான் பின் ஹமாதுக்கும் தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டுள்ளனர்.

இஸ்மாமிய ஒத்துழைப்பு அமைப்பு 57 அரபு நாடுகளின் கூட்டணியாகும்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இன்று இலங்கைக்கு எதிரான பிரேரணை மீது வாக்கெடுப்பு இடம்பெறவுள்ள நிலையில், நேற்று அரசு இறுதி முயற்சிகளில் இறங்கியுள்ளது. (நி-4)

# புகையிரத விபத்திற்கு நீதி கோரி தலைமன்னாரில் போராட்டம்





(மன்னார்)

தலைமன்னார் பியர் பகுதியில் உள்ள புகையிரதக் கடவையில் கடந்த 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மதியம் தனியார் பேருந்தும் புகையிரதமும் மோதி ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்த மாணவனின் மரணத்திற்கு நீதி கோரி நேற்று திங்கட்கிழமை காலை தலைமன்னார் பியர் பகுதியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சர்வ மதத் தலைவர்கள், அரசியல் பிரதிநிதிகள் இணைந்து பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து குறித்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

புகையிரதக் கடவைக்கான தடையினை புதிதாக அமைத்து, அதற்கான பாதுகாப்பு ஊழியரை புதிதாக நியமிக்கக் கோரியும் அத்துடன் வயோதிபர் இல்லாமல் நடுத்தர வயதுடையவர்களைக் கடமையில் ஈடுபடுத்த வேண்டும் எனவும் குறித்த புகையிரதக் கடவையை பொலிஸார் தொடர்ச்சியாக கண்காணிக்க வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்தனர்.

இதன்போது போராட்டம் இடம்பெற்ற பகுதிக்கு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஏ.ஸ்ரான்லி டி மேல், மன்னார் பிரதேச செயலாளர் ம.பிரதீப், புகையிரத திணைக்கள அதிகாரி ஆகியோர் சென்று போராட்டத்தில் ஈடுபட்டவர்களோடு கலந்துரையாடினர்.

இதன்போது குறித்த கோரிக்கைகளை நிவர்த்தி செய்ய உடனடியாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் அரசாங்க அதிபர் உறுதியளித்தார். (நி-4-285)

## ஐ.நா.விவகாரத்தில் இராஜதந்திர ரீதியில் நடவடிக்கை வேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தி

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை விடயத்தை இலங்கை அரசாங்கம் இராஜதந்திர ரீதியில் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அக்கட்சியின் தேசிய அமைப்பாளர், பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க, அமர்வின் முடிவில் இலங்கைக்கு பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டால் பொதுமக்கள் பெரும் பாதிப்பை சந்திக்க நேரிடும் என தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை இராணுவமயமாக்கல் போன்ற விடயங்களை எடுத்துக்காட்டுகிறது என குறிப்பிட்ட அவர் இலங்கைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட குறித்த தீர்மானம் பாராட்டத்தக்கதல்ல.

எனவே இராணுவமயமாக்கல் குறித்தும் அவர்கள் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளை மீறுவதற்கு இலங்கை அரசாங்கம் முயற்சிக்கக்கூடாது என்றும், இது மோதல்களுக்கு வழிவகுக்கும் என்றும் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டார். (நி-4)


# கிளி.உருத்திரீஸ்வரர் ஆலய வளாக அகழ்வுப் பணிக்கு எதிர்ப்பு தெரிவித்து

## சுழற்சி முறையிலான போராட்டம் முன்னெடுப்பு

(முறிகண்டி)

கிளிநொச்சி உருத்திரீஸ்வரர் ஆலய வளாகத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அகழ்வு பணிக்கு எதிர்ப்பு தெரிவித்து சுழற்சி முறை போராட்டம் நேற்று ஆரம்பமானது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட உருத்திரபுரம் பகுதியில் அமைந்துள்ள உருத்திரீஸ்வரர் ஆலய வளாகத்தில் குறித்த அகழ்வு பணிகள் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று காலை முதல் குறித்த வளாகத்தில் எதிர்ப்பு தெரிவித்து சுழற்சி முறையிலான போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.



நேற்றைய போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, மத தலைவர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (நி-4-100-316)

## வடமராட்சி
# தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

### நெல்லியடி நவீன சந்தை புதிய கட்டிடத் தொகுதியிலுள்ள GF 06, GF 08 கடைகள் வாடகைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2021

கீழேஅட்டவணையில் விபரிக்கப்பட்டகடைகளினை உள்ளூராட்சித் திணைக் களத்தின் 1980/46ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக ஒரேமுறையில் செலுத்தக்கூடிய ஆகக் கூடிய கேள்வித் தொகையினை இச்சபைக்கு செலுத்துப வர்களுக்கு ஏப்ரல் மாதம் தொடக்கம் வாடகைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றது.

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி:- 24.03.2021

02. கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி:- 06.04.2021

03. கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 07.04.2021 காலை 10.30மணிக்கு.

04. கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதி அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடதுபக்கமேல் மூலையில் கேள்வியின் பெயரும் கடை இலக்கமும் தெளிவாக எழுதப்பட்டு உரியதினத்திற்குமுன்னர் எமக்குகிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ, அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டகேள்விப் பெட்டியில் இடுவதன் மூலமாகவோ சேர்க்கப்படல் வேண்டும்.

05. கேள்விப் பத்திரங்கள் பெறவிரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையை கொண்டு வருவதுடன், அதன் நிழற்படப் பிரதியையும், கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.

06. கேள்விப்படிவத்தினை தலைமை அலுவலகத்தில் தேசிய அடையாள அட்டையை காண்பித்து உரியபடிவக் கட்டணம், மீளளிக்கப்படும் வைப்புப் பணம் என்பவற்றைச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

07. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாதகேள்விக் கோரிக் கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

08. விலைமதிப்பீட்டு திணைக்களத்தினால் குறைந்தபட்சம் 05 வருடங்களுக்கு ஒருமுறையாவது வாடகைப்பணம் மீளாய்வுசெய்யப்படும். அவசிய மேற்பட்டால் வருடத்திற்கு 01 முறை மீளாய்வுசெய்யப்படும். இம்மாற்றத்திற் கேற்பவாடகைக் கட்டணம் மாற்றம் அடையும்.

09. அரசநிறுவனங்களும், கூட்டுத்தாபனங்களும், கூட்டுறவுச்சங்கங்களும் இக்கேள்வி நடைமுறைக்கமைவாக விண்ணப்பிக்கலாம்.

10. மாதாந்த வாடகைப் பணத்தை அடுத்துவரும் மாதம் 10ம் திகதியன்று அல்லது அதற்குமுன்னர் செலுத்துதல் வேண்டும். அவ்வாறுசெலுத்தத் தவறின் கட்டுப்பணத்தின் 10 சதவீதம் தண்டப்பணமாக செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இரு மாதங்களிற்கு வாடகைப்பணங்களைச் செலுத்தத் தவறுவோரது ஒப்பந்தம் மறு அறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும்.

11. கடந்த காலங்களில் தவறுநர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்பட்டோர் அல்லது அச்சபைக்கு குத்தகையாக, வாடகையாக, வரியாகநிலுவையில் உள்ளோர் கேள்விகள் கோர அருகதையற்றவராவார்.

12. குத்தகைக்கு பெற்ற கடையின் மின்சார இணைப்புக் கட்டணங்கள் மாதாந்தக் கட்டணங்கள் யாவும் குத்தகையாளரின் பொறுப்பில் அமையும்.

13. இந் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக, தெரிவுசெய்யப்பட்ட குத்தகைக்காரர் சபையுடன் செய்து கொள்ளும் குத்தகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட வேண்டிய பொறுப்புடையவராகின்றார்.

மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலகநாட்களில் கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

நெல்லியடி நவீன சந்தைக் கடைகள் கேள்வி அட்டவணை

| தொ.இல | கடை இல. | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | மீளளிக்கப் படும் கேள்விவைப்பு | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரகட்டணம் | மாதவாடகை |
|---|---|---|---|---|---|
| GROUND FLOOR | | | | | |
| 01 | GF 06 | 1,080,000.00 | 10,800.00 | 1,000.00 | 4,500.00 |
| 02 | GF 08 | 1,080,000.00 | 10,800.00 | 1,000.00 | 4,500.00 |

**க.த.ஐங்கரன்**
**தவிசாளர்**
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.
23.03.2021

(C-1789)

## வடமராட்சி
# தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

### சந்தை, இறைச்சிக் கடைக்கான 01.04.2021 - 31.12.2021 வரையுள்ள காலப் பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான ஏலக் கேள்வி அறிவித்தல் - 2021

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தை, இறைச்சிக் கடைகளினை 01.04.2021 - 31.12.2021 வரை குத்தகைக்கு வழங்குவதற்காக ஏலத்தில் விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏலக் கேள்விகள், 27.10.2020 ஆம் திகதிய தினக்குரல், வலம்புரிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளிற்கு அமைவாக கோரப்படுகின்றன.

ஏலம் 31.03.2021 காலை 10.00 மணிக்கு நடைபெறும்.
ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் தலைமை அலுவலகத்தில் கேள்வி வைப்புப் பணத்தினை செலுத்தி பற்றுச் சீட்டினை 22.03.2021 தொடக்கம் 31.03.2021 முற்பகல் 10.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

| தொ.இல | குத்தகை விபரம் | 2021ஆம் ஆண்டு ஆகக் குறைந்த ஏலக் கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம். | மாத வாடகை |
|---|---|---|---|---|
| | உடுப்பிட்டி உப அலுவலகம் | | | |
| 1 | அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 490,900.00 | 4950.00 | 100.00 |
| 2 | மண்டான் சந்தை | 32,300.00 | 350.00 | - |

இதற்கான ஏலக் கேள்வியில் கலந்து கொள்பவர்கள் மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணத்தினை 31.03.2021 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன் செலுத்துவதுடன், சித்திகரக் கேள்விக்காரர் உடனடியாக ஏலத்தொகையின் 1/3 பங்கு பாதுகாப்பு வைப்பு பணத்தை செலுத்தி ஒப்பந்தம் செய்ய வேண்டும். பாது காப்பு வைப்புப் பணம் உடனடியாக செலுத்தத் தவறும் பட்சத்தில் அடுத்த கேள்விதாரருக்கு குத்தகை வழங்கப்படும்.

**க.த.ஐங்கரன்,**
**தவிசாளர்,**
**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,**
**கரவெட்டி.**
**23.03.2021**

(C-1788)

## வடமராட்சி
# தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

### இறைச்சிக் கடைகளுக்கான 01.04.2021 - 31.12.2021 வரையுள்ள காலப் பகுதிக்கான குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2021

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :-24/03/2021 இல் இருந்து 06.04.2021 ஆம் திகதி 3.00 மணி வரை

02. கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :-07.04.2021 காலை 10.00 மணி வரை

03. கேள்விகள் திறக்கப்படும் திகதி :-07.04.2021காலை10.30 மணி

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச நிஉவாக எல்லைக்குட்பட்ட பின்வரும் இறைச்சிக் கடைகளிற்கான கேள்வி அறிவித்தல், 27.10.2020 ஆம் திகதிய தினக்குரல், வலம்புரிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளிற்கு அமைவாக மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

04. கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதி அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கேள்வி யின் தன்மை குறிப்பிட்டு, உரிய தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ, அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப் பட்ட கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். அதன் இரண்டாவது பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

05. கேள்விப்பத்திரங்கள் பெறவிரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையை கொண்டு வருவதுடன், அதன் நிழற்படப் பிரதியையும், கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமஉப்பிக்க வேண்டும்.

06. மேலதிக விபரங்களை அந்தந்த உப அலுவலகங்களிலும்,தலைமை அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| தொ.இல | குத்தகை விபரம் | 2021ஆம் ஆண்டு ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம். | மாத வாடகை |
|---|---|---|---|---|
| | உடுப்பிட்டி உப அலுவலகம் | | | |
| 1 | சாண்டா சந்தை கோழி இறைச்சிக்கடை | 52550.00 | 5300.00 | 100.00 |
| 2 | உடுப்பிட்டி ஆட்டிறைச்சிக்கடை | 87500.00 | 8750.00 | 100.00 |

**க.த.ஐங்கரன்,**
**தவிசாளர்,**
**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி.**

(C-1787)

# கனரக வாகனங்களுக்கான அனுமதிப் பத்திரத்துடன் பயணிகள் பேருந்தை செலுத்த முடியாது

**(கொழும்பு)**

**நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் பேருந்து விபத்துக்கள் காரணமாக புதிய சாரதி அனுமதிப்பத்திரம் ஒன்று அறிமுகம் செய்யப்படும் என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.**



இனிவரும் காலங்களில் கனரக சாரதிகளுக்கான அனுமதிப்பத்திரம் கொண்டவர்களும் பயணிகள் பேருந்து செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொண்டால் மாத்திரம் பயணிகள் போக்குவரத்து பேருந்துகளைச் செலுத்த முடியும் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

இதன் காரணமாக பொதுப் போக்குவ ரத்துச் சாரதிகள் அனுமதிப்பத் திரம் அறிமுகம் செய்யப்படும். அத்துடன் அந்தச் சாரதிக்கு இரண்டு வாரங்களுக்கு விசேட பயிற்சி வழங்கப்படவுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். (நி-4)

## இம்ரான்கானின் விஜயத்திற்கு முன்பே முடிவெடுத்துவிட்டோம்

(கொழும்பு)

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானின் இலங்கை விஜயத்திற்கு பின்னரே, இலங்கையில் ஜனாஸா அடக்கம் செய்ய அனுமதி வழங்கப்பட்டதாக கூறப்படும் கருத்தை, அமைச்சர் சரத் வீரசேகர நிராகரித்துள்ளார்.

ஜனாஸா அடக்கம் செய்யும் விவகாரமானது அரசியல் தீர்மானம் கிடையாது எனவும் அது சுகாதார தரப்பினரின் தீர்மானம் எனவும் அவர் குறிப்பிட்டார். (நி-4)

## ஊடக அச்சுறுத்தல் கண்டித்து ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

நாட்டில் தற்போது முன்னெடுக்கப்படுகின்ற வன அழிப்புக்கள் மற்றும் சுற்றாடல் சீரழிவுகள் தொடர்பில் உண்மைகளை வெளிப்படுத்துகின்ற பொது மக்களுக்கும், ஊடகங்களுக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

எனவே சுற்றாடல் பாதுகாப்பை வலியுறுத்தி ஐக்கிய மக்கள் சக்தி நாளை புதன்கிழமை கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். (நி-4)

## பசறையில் மீண்டும் விபத்து பெண் உயிரிழப்பு



(பதுளை)

பசறை-தொழும்புவத்தை - 3 ஆம் கட்டை பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பசறையிலிருந்து படல்கும்புர நோக்கி பயணித்த முச்சக்கரவண்டி ஒன்று எதிர் திசையில் வந்த சிறிய ரக பாரவூர்தியுடன் மோதுண்டதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் பயணித்த முச்சக்கரவண்டியே இவ்வாறு விபத்துள்ளானது அதில் பெண் ஒருவர் பலியானதுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் பசறை மற்றும் பதுளை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பசறை பொலிஸ் நிலையத்தினர் முன்னெடுத்து வருகின்றனர். (நி-4)

## பொலிஸ் நிலையத்தில் வைத்து மனைவி மீது அசிட் வீசிய கணவன்

(கொழும்பு)

பொலிஸ் நிலையத்துக்குள் வைத்து மனைவி மீது கணவன் அசிட் வீசினார்.

இந்த சம்பவம் காலி - உடுகம பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் காலை இடம் பெற்றது.

இதில் படுகாயமடைந்த மனைவி காலி-கராபிட்டி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குடும்ப தகராறு காரணமாக அளிக்கப்பட்ட முறைப்பாடு ஒன்றின் அடிப்படையில் கணவன் மற்றும் மனைவி இருவரும் பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு இருந்தனர்.

இதன்போதே கணவனால் மனைவி மீது அசிட் வீச்சு தாக்குதல் நடத்தப்பட் டுள்ளது. இவர்களுக்கு மூன்று குழந்தைகளும் உள்ளனர்.

இதன்போது பொலிஸ் அதிகாரி ஒருவரும் காயமடைந்ததுடன், சந்தேகநபர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (நி-4)

## பெற்றோர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியில் தரம் 6 மாணவர்களுக்கான வகுப்புக்கள் எதிர்வரும் 25.03.2021 வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

அனுமதியினைப் பெற்றுக் கொண்ட மாணவர்கள் அனைவரும் கல்லூரிக்குச் சமுகமளிப்பதனைப் பெற்றோர்கள் உறுதிப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 2021 இல் தரம் 6 இற்கு அனுமதியைப் பெற்றுக் கொண்ட மாணவர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடலானது 24 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

எனவே அனுமதி பெற்ற மாணவர்களின் பெற்றோர்கள் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றித் தவறாது கலந்துரையாடலுக்குச் சமுகமளிக்குமாறு பாடசாலை அதிபர் எம். ஞானசம்பந்தன் அறிவித்துள்ளார். (5-4)

## நீதி கிடைக்காவிட்டால் நாடு முழுவதும் போராட்டம்

### மல்கம் ரஞ்சித்

(கொழும்பு)

ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னர் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்க அரசாங்கம் தவறினால் நாடு முழுவதும் போராட்டங்கள் இடம்பெறும் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

நேற்று திங்கட்கிழமை ஆராதனையின் பின்னர் இடம் பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் ஆணைக்குழுவால் குற்றவாளிகள் என பெயரிடப்பட்டவர்கள் மீது இந்த நேரத்திற்குள் அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் போராட்டம் தொடரும் என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை குறித்த சம்பவத்திற்கு நீதி வழங்கப்படும் வரை பொதுமக்கள் தரப்பில் எப்போதும் நிற்பேன் என்றும் அவர்மேலும் தெரிவித்தார். (நி-4)



கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் மத்திய சுகாதார அமைச்சினால் நெதர்லாந்து அரசின் நிதி உதவியுடன் புதிதாக அமைக்கப்பட்டு வரும் வடக்கிற்கான சிறப்பு மகப்பேற்று விடுதியின் வேலை முன்னேற்றத்தினை நேற்று முன்தினம் நெதர்லாந்துத் தூதுவர் பார்வையிட்டார்.

(படம்: கிருஷ்ணகுமார்)

## ராஜிதவிடம் விசாரணை

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சத்துர சேனாரட்ன ஆகிய இருவரும் 5 மணி நேர வாக்குமூலம் வழங்கிய பின் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவில் இருந்து வெளியேறியுள்ளனர்.

வாக்குமூலம் வழங்குவதற்காக நேற்றுக்காலை அவர்கள் இருவரும் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவில் ஆஜராகியிருந்தனர்.

ஊடகவியலாளர் ஒருவர் தன்னை கடத்திச் சென்று தாக்குதலுக்கு உட்படுத்தியதாக வழங்கிய பொலியான முறைப்பாடு தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காகவே அவர்கள் இவ்வாறு ஆஜராகியிருந்தனர். (நி-7)

# விழிப்புணர்வு சுவரொட்டிகளை மறைத்தால் சட்ட நடவடிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் மக்களின் நலனுக்காக காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் விழிப்புணர்வு பதாகைகளுக்கு மேலாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருப்பதாக சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் ம.நடனதேவன் தெரிவித்தார்.

அண் மையில் சாவகச்சேரி நகர சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகர்பகுதியில் பொதுமக்களின் நலனுக்காக காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் கழிவு முகாமைத்துவம் மற்றும் கொரோனா விழிப்புணர்வு உள்ளிட்ட விழிப்புணர்வு பதாகைகளுக்கு மேலாக அவற்றை மறைத்து தனியார் நிறுவனங்களால் சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்படுகின்றன.

இவ்வாறு பொறுப்பற்ற விதத்தில் விழிப்புணர்வு பதாகைகளை மறைத்து சுவரொட்டிகளை ஒட்டும் நிறுவன உரிமையாளர்களுக்கு எதிராக நகர சபை சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (5-4-30)



வடமராட்சி துணவி பகுதியில் வசிக்கும் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட குடும்பம் ஒன்றிற்கு ஒரு மில்லியன் ரூபாய் பெறுமதியான வீடு இராணுவத்தினரால் அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல்லினை மாவட்டக் கட்டளைத் தளபதி பிரியந்த பெரேரா கடந்த வெள்ளிக்கிழமை நாட்டிவைத்தார். இதற்கான நிதியினை கொழும்பில் வசிக்கும் சமூக செயற்பாட்டாளரான குமார் வீரசூரிய வழங்கினார். (படம்-கஜிந்தன்)

# திக்கம் வடிசாலையை மீள ஆரம்பிக்க நடவடிக்கை

(சாவகச்சேரி)

பனை வடி சாராயத்திற்கான வரியை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.


அண்மையில் கைதடி பகுதியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு விஜயம் மேற்கொண்டு வடிசாலை உறுப்பின்ர்கள் மற்றும் பனை தென்னை வள திணைக்களங்களின் அதிகாரிகளுடனான சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பனை வடி சாராயத்திற்கான வரியை குறைத்து தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு ஊக்கமளிக்க நடவடிக்கை எடுத்துள்ளேன். இது தொடர்பில் மதுவரித் திணைக்கள ஆணையாளருடன் பேசி உரிய தீர்வினைப் பெற்றுத் தருவேன் எனத் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் கிரிஷாந்த பத்திராஜ்,

யுத்த காலத்தில் வரி செலுத்தப்படாமல் இருக்கும் வடிசாலைகளுக்கான வரியை விலக்கழிப்பது தொடர்பாக வும், திக்கம் வடிசாலையை மீள ஆரம்பிப்பது தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். (5-4-30)



தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இரத்ததான முகாம் நிகழ்வு இடம்பெற்றது. (படம்-ரவிசாந்)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இன்ரறக்ட் கழகம் நடத்தும் வருடாந்த இரத்ததான முகாம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும்.

மேற்படி இரத்ததான முகாமில் அனைவரையும் இணைந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-18)

# விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக இறை ஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் நாளை 24 ஆம் திகதி புதன்கிழமை காலை 6.30 மணிக்கு தெல்லிப்பழை பன்னாலை சிவபூதவராயர் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெறவுள்ளன.

விசேட பூஜை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ ம. மகேந்திரசர்மா குருக்களின் அருளாசி உரையும் வேத பாராயணமும் இடம் பெறவுள்ளன.

இந் நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம் பெறும் ஆலய தரிசனம் நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒளிபரப்புச் செய்யப்படும். (5-4)

# சொற்பொழிவு

(குப்பிழான்)

நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் இடம் பெறும் வாராந்தச் சொற்பொழிவு எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.15 மணியளவில் ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச் சொற்பொழிவில் சைவப் புலவர் சிவநெறிச் செம்மல் கா. கமலநாதன் அக்கினிப்பூ எனும் தலைப்பில் சிறப்புச் சொற் பொழிவாற்றுவார். (5-4-18)

# குருபூசை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிவதொண்டன் சபையில் யோகர் சுவாமிகளின் குருபூசை தினம் எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

இதில் திவ்யமான அபிஷேக ஆராதனைகளும் இடம் பெறவுள்ளன. (5-4)

# புதிய கல்வி ஆண்டிற்கான கற்கை நெறிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியில் 2021 ஆம் ஆண்டிற்கான சான்றிதழ்தர (NVQ 3 &4) கற்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத் துடன் டிப்ளோமா தர (NVQ 5&6) கற்கை நெறிகள் ஆரம்பமாகவும் உள்ளன.

இருப்பினும் இலத்திரனியல் , மெசினிஸ்ற் , வெல்டிங், கட்டட நிர்மாணம் போன்ற சான்றிதழ் தர கற்கை நெறிகளுக்கும் தொலைத் தொடர்பாடல் தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா , மின்னியல் தொழில்நுட்ப தேசியடிப்ளோமா, க.பொ.த உயர்தரம் பொது ஆங்கிலம் சாதாரண சித்தியுடன் 3 பாடங்களும் சித்தியடை ந்தவர்க ளுக்கான ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக கற்பித்தலில் தேசிய டிப்ளோமா போன்ற முழு நேர கற்கை நெறிகளுக்கும் மற்றும் தேசிய தொழில் நுட்பவியல் சான்றிதழ் (NVQ 5) பகுதி நேர கற்கை நெறிகளான கணிய அளவையியல், ஓட்டோ மொபைல் , மின்னியல் மற்றும் இலத்திரனியல் போன்ற கற்கை நெறிகளுக்கும் சில மாணவர்களை மேலதிகமாக உள்வாங்கக் கூடியதாக உள்ளது.

எனவே பயில விரும்பும் தகுதியுடைய மாணவர்கள் துரிதமாக விண்ணப்பங்களை சமர்ப்பித்து இணைந்து கொள்ளவும் மேலதிக விபரங்களுக்கு தொழில்நுட்பக் கல்லூரியுடன் நேரடியாக அல்லது 021 222 0028 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொள்ள முடியும் என யாழ்ப்பாணம் தொழில் நுட்பவியல் கல்லூரிப் பணிப்பாளர் எஸ். முகுந்தன் அறிவித்துள்ளார்.

மேற்படி முழு நேரக் கற்கை நெறிகள் முற்றிலும் இலவசமானது. இக் கற்கை நெறிகளுக்கு, மாதாந்த உதவு தொகை, போக்குவரத்து பருவகால சீட்டு என்பன வழங்கப்படும். (5-4)



தவக்காலத்தை முன்னிட்டு மானிப்பாய் அருணோதய மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவின் அனுசரணையில் இரத்ததான முகாம் நிகழ்வு நேற்று முன்தினம் மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்தில் நடைபெற்றது. (படம்-ரவிசாந்)

# திருமறைக் கலாமன்றத்தின் தவக்கால ஆற்றுகை

(குப்பிழான்)

ஒவ்வொரு வருடமும் சுமார் பத்தாயிரத்துக்கும் அதிகமான பார்வையாளர்கள் பார்வையிடுகின்ற திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்குகின்ற பிரமாண்டமான அரங்கப் படைப்பான தவக்கால ஆற்றுகை இம்முறை சிறிய தயாரிப்பாக ஆயிரம் பார்வையாளர்களை மட்டும் உள்வாங்கக்கூடிய வகையில் இல.286.பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைத்தூதுக் கலையகத்தில் அரங்கேறவுள்ளது.

இம்முறை "களங்கம்" என்னும் பெயரில் தவக்கால ஆற்றுகை எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரையான மூன்று நாட்களுக்கு (வெள்ளி, சனி, ஞாயிறு) இடம்பெறவுள்ளது.

இந்த ஆற்றுகையைப் பார்வையிட விரும்புகின்ற பார்வையாளர்கள் முன்னதாகவே தமக்குரிய அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு திருமறைக் கலாமன்றத்தினர் கேட்டுள்ளனர்.

மூன்று நாட்களும் மாலை 4 மணிக்கும், மாலை 6.30 மணிக்கும் என இரு காட்சிகள் இடம் பெறும். ஒரு காட்சிக்கு 150 பேர் மட்டுமே அனு மதிக்கப்படுவார்கள்.

பார்வையாளர்கள் அனைவரும் தற்போது நடைமுறையில் உள்ள கொரோனா தடுப்பு சுகாதார விதிமுறைகளை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும் எனவும் திருமறைக் கலாமன்றத்தினர் தெரிவித்துள்ளனர். (5-4-18)

# குடியியல் நடவடிக்கைச் சட்டக்கோவையின் பிரிவு 16 இன் கீழாக அறிவித்தல்

## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

லிகோறி கிளெமென்ற் ஜெயசீலன்,
இல.70/21, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
-வழக்காளி-

வழக்கு இல.விஷேடம் / 25 / 2021

எதிராக
1)R.E.ஆனந்தராசா
தலைவர்
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்,
காங்கிரஸ் இல்லம்,
இல.120, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

2)கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,
பொதுச் செயலாளர்,
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்,
காங்கிரஸ் இல்லம்,
இல.120, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

3)இ.கி.அமல்ராஜ்
தெரிவத்தாட்சி அலுவலர்,
யாழ்ப்பாணம் மாநகர சபை,
தேர்தல்கள் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
-எதிராளிகள்-

மேற்படி இலக்க வழக்கின் வழக்காளியினால் மேலே குறிப்பிடப்பட்ட 1-3 வரையான எதிராளிகளுக்கு எதிராக 1 ஆம் எதிராளி தலைவராகவும் 2 ஆம் எதிராளி பொதுச்செயலாளராகவும் பதவி வகிக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் அடிப்படை உறுப்புரிமையில் இருந்து வழக்காளியை நீக்கியுள்ளதாக குறிப்பிடப்படும் செயற்பாடு அல்லது தீர்மானம் சட்டவலுவற்ற, செல்லுபடியற்ற என பிரகடனப்படுத்தும் கோரிக்கையை பிரதான நிவாரணமாக கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே கூட்டிணைக்கப்படாத அரசியல் கட்சியினால் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் அக்கட்சியின் அங்கத்தவர்கள் எவரும் எதிர்வாதிடலாம் என குடியியல் நடவடிக்கை சட்டக் கோவையின் பிரிவு 16 இன் கீழான அறிவித்தல் தரப்படுகின்றது. மேலும் இவ்வழக்கானது 01.04.2021 ஆம் திகதி காலை 9.00க்கு இம்மன்றின் திறந்த மன்றில் அழைக்கப்படவிருக்கின்றது என்றும் அறிவித்தல் தரப்படுகின்றது.

மன்றின் கட்டளைப்படி
2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி

பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

(6285)

# குடியியல் நடவடிக்கைச் சட்டக்கோவையின் பிரிவு 16 இன் கீழாக அறிவித்தல்

## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

வரதராஜன் பார்த்திபன்,
இல.140, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
-வழக்காளி-

வழக்கு இல.விஷேடம் / 22 / 2021

எதிராக
1)R.E.ஆனந்தராசா
தலைவர்
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்,
காங்கிரஸ் இல்லம்,
இல.120, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

2)கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,
பொதுச் செயலாளர்,
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்,
காங்கிரஸ் இல்லம்,
இல.120, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

3)இ.கி.அமல்ராஜ்
தெரிவத்தாட்சி அலுவலர்,
யாழ்ப்பாணம் மாநகர சபை,
தேர்தல்கள் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
-எதிராளிகள்-

மேற்படி இலக்க வழக்கின் வழக்காளியினால் மேலே குறிப்பிடப்பட்ட 1-3 வரையான எதிராளிகளுக்கு எதிராக 1 ஆம் எதிராளி தலைவராகவும் 2 ஆம் எதிராளி பொதுச்செயலாளராகவும் பதவி வகிக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் அடிப்படை உறுப்புரிமையில் இருந்து வழக்காளியை நீக்கியுள்ளதாக குறிப்பிடப்படும் செயற்பாடு அல்லது தீர்மானம் சட்டவலுவற்ற, செல்லுபடியற்ற என பிரகடனப்படுத்தும் கோரிக்கையை பிரதான நிவாரணமாக கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே கூட்டிணைக்கப்படாத அரசியல் கட்சியினால் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் அக்கட்சியின் அங்கத்தவர்கள் எவரும் எதிர்வாதிடலாம் என குடியியல் நடவடிக்கை சட்டக் கோவையின் பிரிவு 16 இன் கீழான அறிவித்தல் தரப்படுகின்றது. மேலும் இவ்வழக்கானது 01.04.2021 ஆம் திகதி காலை 9.00க்கு இம்மன்றின் திறந்த மன்றில் அழைக்கப்படவிருக்கின்றது என்றும் அறிவித்தல் தரப்படுகின்றது.

மன்றின் கட்டளைப்படி
2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி

பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

(6284)

# ரஞ்சனின் மனு நிராகரிப்பு

(கொழும்பு)

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் வழங்கப்பட்ட தண்டனையை மறுபரிசீலனை செய்யுமாறு ரஞ்சன் ராமநாயக்கவின் சட்டத்தரணி தாக்கல் செய்த மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

மூன்று நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வில் குறித்த மனு விசாரணைக்கு வந்தபோதே அதனை நிராகரித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டின் பேரில் 4 ஆண்டுகள் கடுழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ரஞ்சன் ராமநாயக்க தற்போது அங்குனுகொலபெலஸ்ஸ சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். (நி-4)


# சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்

### விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

சுன்னாகம் ப.நோ.கூ.சங்கத்திற்கு கீழ் குறிப்பிட்ட பதவிகட்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01.கிராமிய வங்கி முகாமையாளர்கள்.
02.எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் மற்றும் பம்பர்.
03.தேநீர்ச்சாலை முகாமையாளர் மற்றும் உபசரிப்பாளர்.
04.கணனி இயக்குநர்.

**விண்ணப்ப முடிவுத்திகதி :- 31.03.2021**
**விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தலைமையகத்துடன் தொடர்பு கொள்ளவும்.**
**தொலைபேசி இலக்கம் :- 021 224 3627**

(C-1785)

தலைவர்,
சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம் (வ-து),
சுன்னாகம்.



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: செவ் 8 சூரி 11 இல்<br>தகைமை/தொழில்: HNDA, Work- DO<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம் பார்க்கும் பெண், உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/11642 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 56 1/4 செவ் 1 சூரி 11 இல் உயரம்: 5'3'<br>தகைமை/தொழில்: சட்டத்தரணி<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Bank, உள்நாடு மட்டும், சட்டத்தரணியும் எதிர்பாக்கப்படும்<br>தொ.இ: G/2626 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 48 செவ் 10 சூரி 7 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: ஆசிரியர்டிப்ளோமா (PT)<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் வேலை, உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/11643 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 67 செவ் 9 சூரி 10 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பட்டதாரி, தொழில் - பட்டதாரி பயிலுநர்<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார், சொந்த தொழில் வீடு கொடுக்க உண்டு<br>தொ.இ: G/2635 |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: செவ் 6 சூரி 9 இல் உயரம்: 5.5<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: வங்கியில் வேலை செய்கிறார் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/11644 | பிறப்பு: 1973 இந்து நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 5 செவ் 11 சூரி 2 இல் உயரம்: 5'5<br>தகைமை/தொழில்: படித்த பெண்<br>எதிர்பார்ப்பு: வியாபாரம், கடை, கமம்<br>தொ.இ: G/2643<br>பிறப்பு: 1972 இந்து நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 24 1/2 செவ் 4 சூரி 3 இல் உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L Math, Work-Pre-Teacher<br>எதிர்பார்ப்பு: கனடா, அவுஸ்திரேலியா வரன் நல்லது, உள்நாடு ஆயின் - அரசாங்க, சொந்த தொழில்<br>தொ.இ: G/2649 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 52 செவ் 8 சூரி 11 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: B.A தொழில்- கடை<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/11646 | |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# காணி உரிமம் கிடைக்கப்பெற்றதும் போக்குவரத்துச்சாலை அமைக்கப்படும்

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி மாவட்ட இ.போ.ச.சாலைக்கு நிரந்தர சாலை ஒன்றை அமைக்க வேண்டியதன் அவசியத்தை உரிய தரப்பினர் வலியுறுத்தியதனையடுத்து அதனை விரைவில் அமைத்து தருவதாக போக்குவரத்துச் சேவைகள் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் அமுனுகம உறுதியளித்தார்.**

கிளிநொச்சி மாவட்டத்துக்கு கடந்த வியாழக்கிழமை வருகை தந்த போக்குவரத்து சேவைகள் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மேலதிக இணைப்பாளர் றுஷாங்கன் சகிதம் கிளிநொச்சி போக்குவரத்து சாலை முகாமையாளர், ஊழியர்களுடன் அவர்களுடைய பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடல் நடத்தினார்.

இதன்போது, கிளிநொச்சி மாவட்ட இலங்கை போக்குவரத்துச் சபைக்கு நிரந்தர சாலை ஒன்றை அமைக்க வேண்டியதன் அவசியத்தை முகாமையாளர் தலைமையிலான குழுவினர் வலியுறுத்தியபோது அதனை உடனடியாக அமைத்துத்தருவதாக இராஜாங்க அமைச்சர் உறுதியளித்தார்.

போக்குவரத்துச்சாலைக்கென ஒதுக்கப்பட்ட காணிக்கான உரிமம் இன்னமும் போக்குவரத்துச்சபைக்குக் கிடைக்கப்பெறவில்லை என்பதை இதன்போது தெரிவித்த இராஜாங்க அமைச்சர் இந்த விடயம் தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநருடன் பேசி காணி உரிமத்தைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

காணி உரிமம் கிடைக்கப்பெற்றதும், போக்குவரத்துச்சாலையைக் கட்டுவதற்கான பணிகளை உடனடியாக ஆரம்பிப்பதாகவும் இதன்போது சாலை வளாகத்திலேயே எரிபொருள் நிரப்பு நிலையம் மற்றும் பேருந்து திருத்தப் பணிகளுக்கான தொழில்நுட்ப பிரிவு ஆகியவற்றையும் அமைக்க ஏற்பாடு செய்வதாகவும் தெரிவித்தார்.

மேலும், கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்குமான சேவைகளை நடத்துவதற்கு மேலதிகமாகத் தேவைப்படும் சிறிய மற்றும் பெரிய பேருந்துகளையும் விரைவில் பெற்றுத்தருவதாகவும் தெரிவித்தார்.

தற்போது கிளிநொச்சி சாலை வசமிருக்கும் 33 பேருந்துகளில் 27 மட்டுமே செயற்படும் நிலையில் இருப்பதாகவும் மேலதிகமாக சேவை நடத்துவதற்கு மேலதிகமாக பேருந்துகள் தேவை எனவும் சாலை முகாமையாளர் தரப்பில் தெரிவிக்கப்பட்டதையடுத்து மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த ஆட்சிக் காலத்தில் மாகாணசபையினால் ஆரம்பிகப்பட்டு இடையில் கைவிடப்பட்டு விட்ட கிளிநொச்சி பேருந்து தரிப்பிடத்தை நகர அபிவி ருத்தி அதிகாரசபை தற் போது பொறுப்பெடுத்து மேற்கொண்டுவரும் கட்டுமானப் பணிகளையும் அமைச்சர் அமுனுகம பார்வையிட்டார்.

இதன்போது இந்தப் பணிகளைத் துரிதமாக நிறைவு செய்து விரைவில் பேருந்து நிலையத்தை இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் இராஜாங்க அமைச்சர் உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். (5-4)

## சர்வதேச பெண்கள் தின நிகழ்வு

(நெளுக்குளம்)

"உழைக்கும் பெண்களே ஒன்றுசேருங்கள், உரிமைகளை வென்றெடுக்க அணிதிரளுங்கள்" என்ற தொனிப்பொருளில் சர்வதேச பெண்கள் தின நிகழ்வு சிதம்பரபுரம் உதயம் சன சமூக நிலைய மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பெண் விடுதலை சிந்தனை அமைப்பின் இணைப்பாளர் செ.ஆனந்தி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அமைப்பின் தலைவர் பி.மோகனதர்சினி சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்வில் சிதம்பரபுரம் கிராம அபிவிருத்திச்சங்கத்தின் பொருளாளர் சு.செல்வகுமாரன், முன்னாள் தலைவர் ம.மகேந்திரன், பெண் விடுதலை சிந்தனை அமைப்பின் செயலாளர் பி.பிரசாந்தினி, உறுப்பினர் டிலக்சினி சயித் ஆகியோர் கலந்துகொண்டதுடன் கருத்துரைகளையும் வழங்கினர். (5-4-299)




## வன்னேரிக்குளம் வீதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது



(அக்கராயன்)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் வீதி புனரமைக்கப்படுவதால் அக்கராயனில் இருந்து 8 ஆம் கட்டை வரை தற்காலிகமாக வீதி மூடப்படுவதால் வாகனங்கள் ஸ்கந்தபுரம், மணியங்குளம் ஊடாக வன்னேரிக்குளத்திற்கு பயணிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காலை 8மணியிலிருந்து இருந்து இரவு 10 மணி வரை வீதி மூடப்பட்டிருக்கும் என நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

68 ஆண்டுகளுக்கு பின்னர் வன்னேரிக்குளம் வீதி அக்கராயனில் இருந்து புனரமைக்கப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி மேற்கு கிராமங்களான வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் குளம், ஜெயபுரம், வேரவில், முழங்காவில், பல்லவராயன்கட்டு ஆகிய பகுதிகளுக்கு வன்னேரிக்குளம் வீதி புனரமைக்கப்படுவதன் மூலம் போக்குவரத்துகள் இலகுவாக்கப்படும். (5,4,350)

# குளத்தின் நீரேந்துப் பரப்பின் ஊடாக வீதி அமைக்க வேண்டாம்

## மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு அம்பலப்பெருமாள் குளத்தின் நீரேந்துப் பரப்பின் ஊடாக வீதி அமைக்க வேண்டாம் என அக்கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குளத்தின் வான் பகுதியில் இருந்து நிரந்தர வீதி புனரமைப்புகள் முன்னெடுக்கப்பட உள்ளன என பெயர்ப் பலகை வான் பகுதியில் நாட்டப்பட்டுள்ளது.

குறித்த வீதி குளத்தின் அணைக்கட்டினைக் கடந்து அமைய உள்ளதால் குறித்த வீதி அணைக்கட்டினைக் கடந்து செல்லாமல் குளத்தின் நீரேந்துப் ப்ரப்பில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் இருந்து வேலைகளை தொடங்குமாறும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த வீதி நீரேந்துப் பரப்பின் ஊடாக அணை க் கட்டினை முறித்து வீதி அமையுமானால் எதிர்காலத்தில் குளத்தின் அணைக் கட்டினை அபிவிருத்தி செய்வதோ வாய்க்கால்களை அமைப்பதோ முடியாததாக ஆகிவிடும்.

எனவே குளத்தின் அணைக்கட்டில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் இருந்து நிரந்தர வீதியினை அமைப்பதற்கு இவ்வீதிப் புனரமைப்புடன் தொடர்புடைய பொறியியலாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அம்பலப்பெருமாள் குளம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

1968ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அம்பலப்பெருமாள்குளம் குடியேற்றத் திட்டத்தில் குளத்தினை நம்பியே 110 வரையான குடும்பங்கள் விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

குளத்திற்கும் குளத்தின் கட்டுமானங்களுக்கும் பாதிப்புகள் வராத வகையில் வீதிப் புனரமைப்புகளை முன்னெடுக்குமாறு அம்பலப்பெருமாள்குளம் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-350)

## பல் மருத்துவ அதிகாரிகள் வேலைநிறுத்தப் போராட்டம்



(நெளுக்குளம்)

நாடளாவிய ரீதியில் பல் வைத்தியர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு வவுனியா அரச பல் வைத்திய அதிகாரிகள் சங்கமும் தமது ஆதரவை தெரிவித்துள்ளது.

வவுனியா பொது வைத்தியசாலையில் நேற்றுக் காலை முதல் பல்வைத்தியர்கள் கடமைக்கு சமுகமளிக்காமல் அடையாள வேலைநிறுத்த போராட்ட த்தில் ஈடுபட்டனர்.

எனினும் அவசர சிகிச்சைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கை பல்வைத்திய சேவைக்கு எதிரான சதிகளை முறியடிக்கும் வகையில் குறித்த அடையாள பணப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

(5-4-299)

## இராசிபலன்

23.03.2021
பங்குனி 10, செவ்வாய்க்கிழமை
நவமி காலை 6.36 மணிவரை
புனர்பூசம் முன்னிரவு 7.22 மணிவரை
சுபநேரம் 10.46-12.16 மணிவரை
இராகுகாலம் 3.16-4.46 மணிவரை
சந்திராஷ்டமம்:- கேட்டை, மூலம்

வளவன்

**மேஷம்** – சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பெற்றோரின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பயணங்களால் பலனுண்டு.

**ரிஷபம்** – தன்னம்பிக்கையோடு பணிபுரிவீர்கள், பொதுவாழ்வில் கௌரவம், அந்தஸ்து உயரும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்** – குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், அதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்** – வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சிந்தனை மிகுதியான நாள், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, பயணத்தால் பலன் கிடைக்கும்.

**சிம்மம்** – தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், மாற்றங்களால் ஏற்றம் காணும் நாள், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**கன்னி** – தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாக கிடைக்கும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**துலாம்** – குடும்பத்தினரின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், தூரதேசத்திலிருந்து மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம்.

**விருச்சிகம்** – சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், புதிய முயற்சிகள் கைகூடும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு.

**தனுசு** – குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், தொழில் போட்டிகள் அதிகரிக்கலாம், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், பிரயாண பயமுண்டு.

**மகரம்** – நட்பு வட்டம் விரிவடையும் நாள், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாக கிடைக்கும், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கும்பம்** – மறைமுக போட்டிகள் மாறும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மீனம்** – தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

செய்தது கையளவு, செய்ய வேண்டியது கடலளவு

# வாகன டயர்களின் தரத்தினை ஆராய நடவடிக்கை-அஜித் ரோஹண

(கொழும்பு)

**பசறையில் கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட பயங்கர விபத்தினை அடுத்து வாகனங்களின் டயர்களின் தரத்தை ஆய்வு செய்ய பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.**



தேய்ந்துபோன டயர்களுடன் வாகனம் செலுத்தும் நபர்களுக்கு 3 ஆயிரத்து 500 ரூபாவும் தரமற்ற வாகனங்களை செலுத்துபவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா வரையும் அபராதமாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான வாகனங்களை அடையாளம் காண நேற்று முதல் மூன்று நாட்களுக்கு நாடு முழுவதும் சிறப்பு சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை வீதி விபத்துக்கள் காரணமாக நேற்று முன்தினம் நாடு முழுவதும் எட்டு உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# எம்.சி.சி. ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்திடாது- சட்டமா அதிபர்

(கொழும்பு)

அமெரிக்காவுடனான மிலேனியம் சவால்கள் (எம்.சி.சி.) ஒப்பந்தத்தில் இலங்கை அரசாங்கம் கைச்சாத்திடாது என சட்டமா அதிபர், உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

எம்.சி.சி ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதை தடுக்க வேண்டும் என கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

இதேவேளை சோஃபா ஒப்பந்தம் குறித்தும் இதுவரை எந்த முடிவும் எட்டப்படவில்லை என்றும் சட்டமா அதிபர் சார்பாக முன்னிலையான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் அறிவித்தார்.

மேலும் கையகப்படுத்தல் மற்றும் குறுக்கு சேவை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ள நிலையில் அது தொடர்ந்தும் செயற்படுத்தப்படும் என்றும் கூறியுள்ளார்.

இதனை அடுத்து குறித்த மனுக்கள் மீதான மேலதிக விசாரணையை எதிர்வரும் ஜூன் 12 ஆம் திகதி எடுத்துக்கொள்வதாக 03 பேர் அடங்கிய நீதியரசர்கள் அமர்வு அறிவித்தது. (நி-4)

# தடுப்பூசி செலுத்தியவர்கள் இருவாரங்களுக்கு இரத்ததானம் செய்வது நல்லதல்ல

(கொழும்பு)

கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள் இரு வாரங்களுக்கு இரத்த தானம் செய்யக்கூடாது என்று தெரிவிக்கப்படுகிறது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடக மற்றும் மத்திய குழு உறுப்பினர் மருத்துவர் வாசன் ரட்ண சிங்கம் தெரிவித்தார்.

ஏனெனில், தடுப்பூசி செலுத்திக் கொண்டதன் பின்னர் உடலில் பிறபொருளெதிரி உருவாகும்போது குறித்த இரு வாரங்களுக்குள் உடலில் பல்வேறு விளைவுகள் ஏற்படுகின்றன.

இதனால் இரத்ததானம் செய்யக்கூடாது என்று கூறப்படுகிறது. எனினும், அவசர நிலைமையொன்றின்போது இரத்ததானம் செய்ய வேண்டும் என்ற கட்டாய சூழ்நிலை உருவாகின்றபோது, இரத்த வங்கியிலுள்ள வைத்தியர்களின் ஆலோசனைகளை பெற்று இரத்ததானம் செய்வது சிறந்தது. இரத்த தானம் செய்யக்கூடாது என்ற எவ்வித கட்டாயமும் இல்லை.

முதல் தடுப்பூசி செலுத்திக் கொண்டதன் பின்னர் ஏற்படும் விளைவுகளான காய்ச்சல், உடல்வலி என்பன இல்லாது போவதற்கு ஆகக்கூடியது இரண்டு வாரங்கள் வரை தேவைப்படும். எனவே தான் இருவாரங்கள் இரத்ததானம் செய்யக் கூடாது என்று கூறப்படுகிறது.

சாதாரணமாக சுகதேகி ஒருவர், இரத்ததானம் செய்யக்கூடிய இயலுமைகளை கொண்டிருப்பாராயின் அவர் இரத்ததானம் செய்யலாம். தடுப்பூசி ஏற்றிக்கொண்டார் என்பதற்காக, ஒருவர் இரத்ததானம் செய்யக்கூடாது என்ற நிபந்தனைகள் எவையும் இல்லை என வைத்தியர் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையை பொறுத்தவரையில் முதல் தடுப்பூசி செலுத்தி, 10 வாரங்கள் கழிந்த பின்னரே இரண்டாவது தடுப்பூசி செலுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது ஒவ்வொரு நாடுகளுக்கு ஏற்ப 8 - 12 வாரங்களாக மாறக்கூடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)




# யார் அழகு?

எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது! நமக்குள்ளே ஒரு அழகிப் போட்டி நடத்தினால் என்ன?" கேட்டது வெட்டுக்கிளி.

"போட்டி நடத்தலாம். ஆனால் நடுவர் யார்?" சந்தேகம் எழுப்பியது எலி.

"நடுவராக நானிருக்கிறேன்!" திடீரென்று ஒரு சப்தம் கேட்டது.

அனைத்தும் மேலே பார்க்க, மரத்தின் மீது ஒரு காகம் இருந்தது. "நீங்கள் எப்படி?" ஆச்சரியப்பட்டது குரங்கு.

"நீங்கள் மூவரும் பேசிக் கொண்டிருந்ததை நான் கேட்டேன். முயலையும் அழைத்துக் கொண்டு நாளை என் இருப்பிடம் தேடி வாருங்கள்.

ஆனால் நான் தேர்ந்தெடுப்பவரை அழகு ராணியாக அனைவரும் ஒருமனதாக ஏற்றுக் கொள்ள வேண்டும்!" என்று காகம் தன் முகவரி கூறியது.

"அப்படியே செய்கிறோம்.." அனைத்தும் சேர்ந்து குரல் கொடுத்தன.

மறுநாள் அனைத்தும் அழகிய அழகுராணி கனவில் மிதந்து காகத்தைத் தேடி போய்க் கொண்டு இருந்தன.

அப்பொழுது குருவி ஒன்று வலியால் துடித்துக் கொண்டிருந்தது. அதன் கால்களில் காயம் தெரிந்தது.



"எனக்கு யாராவது ஒருவர் உதவி செய்யுங்களேன். ஒரு சிறுவன் கல்லெடுத்து எறிந்து காலில் காயப்படுத்தி விட்டான்!" குருவி பலகீனமாக உதவி கேட்டது.

"நாங்கள் அழகிப் போட்டிக்குப் போய்க் கொண்டு இருக்கிறோம். அபசகுனமாக பேசாதே!" கடுமையாக கூறியது குரங்கு.

குருவியைப் பார்த்த எலியும், வெட்டுக்கிளியும் முகம் திருப்பி சென்று விட்டன. முயல் குருவி அருகே தயங்கி நின்றது. (தொடரும்)

# மகாபாரதம்

பின், துவாரகை சென்று பிரபாசா என்னும் தலத்தை அடைந்தான். கிருஷ்ணரின் தங்கை சுபத்திரையை மணக்கும் ஆசை அவனுக்கு இருந்தது. அதற்கு பலராமன் சம்மதிக்காவிடினும் கண்ணன் உதவி புரிய முன் வந்தார்.

துறவிபோல அருச்சுனன் வேடம் பூண்டு வர பலராமன்துறவியை வணங்கி சுபத்திரையை அவருக்கு பணிவிடை செய்ய பணித்தான். வந்திருப்பது அருச்சுனன் என்பதை அறிந்த அவளும் அவன் மீது காதல் கொண்டாள்.

இதை அறிந்த பலராமர் அருச்சுனனுடன் போரிட முயல கண்ணன் பலராமன் சினத்தை தணித்தார். அருச்சுனன்-சுபத்திரை திருமணம் இனிதே முடிய அருச்சுனன் இந்திரப் பிரஸ்தம் திரும்பினான்.




சில காலத்திற்குப் பின் சுபத்திரை அபிமன்யுவை பெற்றாள். திரௌபதி தன் ஐந்து கணவர்கள் மூலம் ஐந்து பிள்ளைகளைப் பெற்றாள்.

யமுனை நதிக்கரையில் காண்டவ வனம் ஒன்று இருந்தது. இந்தப் பயங்கர காட்டில் இரக்கமில்லா அரக்கர்களும் கொடிய விலங்குகளும், விஷப்பாம்புகளும் இருந்தன. அக்கினிதேவன் அக்காட்டை அழிக்க நினைத்து தோற்றான்.

அவன் அருச்சுனனிடமும் கண்ணனிடம் வந்து முறையிட்டான். காட்டை அழிக்க தேவையான கருவிகளையும் அவர்களுக்கு அளித்தான். அருச்சுனனுக்கு நான்கு வெள்ளை குதிரைகள் பூட்டப்பட்ட தெய்வீக தேர் கிடைத்தது.

அதில்வானரக்கொடி பறந்தது. மேலும் காண்டபம் என்னும் புகழ் வாய்ந்த வில்லும் இரண்டு அம்பறாத்தூணிகளும் கிடைத்தன.

கண்ணனுக்கு சுதர்சனம் என்ற சக்கர ஆயுதமும் கௌமோதகி என்னும் கதாயுதமும் கிடைத்தன. இவற்றின் உதவியால் காண்டவவனம் தீப்பற்றி எரிந்தது. அக்காட்டில்இருந்த தீயவை அழிந்தன. அக்கினிதேவன் மகிழ்ந்தான்.

காண்டவவனம் தீப்பற்றி எரிந்து சாம்பல் ஆனாலும் மயன் என்னும் அசுர சிற்பி மட்டும் தப்பிப்பிழைத்தான். அவன் அருச்சுனனுக்கு தகுந்த கைமாறு செய்ய விரும்பினான். (தொடரும்)

# மன்னராட்சியில் மறுசீரமைப்பு;பிரதமர் பதவி விலகல் போன்றவற்றை வலியுறுத்தி தாய்லாந்தில் போராட்டம்

- பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டு தாக்குதல்
- 13 பொலிஸார் உட்பட 33 பேர் காயம்
- 32 பேர் கைது




(பாங்கொக்)

**தாய்லாந்தில் அரசுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கலைக்க பொலிஸார் தண்ணீரை பாய்ச்சியும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியும் நடவடிக்கை எடுத்தனர்.இந்தக் கலவரத்தில் 13 காவலர்கள் உட்பட 33 பேர் காயமடைந்தனர். பலர் கைது செய்யப்பட்டனர்.**

மன்னராட்சியில் மறுசீரமைப்பு கொண்டுவர வேண்டும், பிரதமர் பதவி விலக வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் உள்ள அரண்மனைக்கு வெளியே ஆயிரக்கணக்கான மக்கள் கடந்த சனிக்கிழமை இரவு போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த நிலையில், அவர்களைத் தடுத்து நிறுத்துவதற் காக கண்டெய்னர்களை வீதியின் குறுக்கே வைத்து பொலிஸார் தடுப்புகளை ஏற்படுத்தினர். அந்தத் தடுப்புகளை மீறி போராட்டக் காரர்கள் முன்னேற முயன்றனர். அப்போது, முதலில் எச்சரிக்கை விடுத்த பொலிஸார் பின்னர் தண்ணீரை பாய்ச்சியும் கண்ணீர்ப் புகைக் குண்டுகள், இறப்பர் குண்டுகளை வீசியும் போராட்டக்காரர்களை கலைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட 32 பேரை பொலிஸார் கைது செய்துள்ளதாக மனித உரிமைகளுக்கான தாய்லாந்து வழக்குரைஞர்கள் அமைப்பு தெரிவித்தது. (நி-4-8)

## 12 நாடுகளுக்கு பாகிஸ்தான் பயணத்தடை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் கொரோனா வைரஸ் பாதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக பிரேசில் உள்ளிட்ட 12 நாடுகளில் இருந்து பயணிகள் பாகிஸ்தான் வருவதற்கு அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது.

இந்த தடை இன்று முதல் அடுத்த மாதம் 5ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் என்றும் பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது. (நி-4-8)

## பயங்கரவாதிகள் நால்வர் சுட்டுக்கொலை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானை தளமாகக் கொண்ட லஷ்கர்-இ-தொய்பா என்ற பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய நான்கு பயங்கரவாதிகள் ஜம்மு-காஷ்மீரின் ஷோபியன் மாவட்டத்தில் நேற்றுக் காலை பாதுகாப்பு படையினருடன் ஏற்பட்ட மோதலில் இந்த நான்கு பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (நி-4-8)


## அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் ஆப்கானிஸ்தானுக்கு திடீர் விஜயம்

(காபூல்)

அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் லாயிட் ஒஸ்டின் ஆப்கானிஸ் தானுக்கான திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.


இவர் முன்னறிவிப்பின்றி ஆப்கானிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரப் கனிக்கும் அமெரிக்க பாதுகாப்பு செயலாளருக்கும் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.



ஜோ பிடனின் அமைச்சரவையில் இருந்து ஆப்கானிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்ட முதலாவது உறுப்பினர் லாயிட் ஒஸ்டின் ஆவார். (நி-4-8)

## இவ்வாண்டின் மிகப்பெரிய கோள் பூமியைக் கடந்தது



(வோஷிங்டன்)

இந்த ஆண்டின் மிகப்பெரிய சிறுகோள் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் பூமியைக் கடந்து சென்றுள்ளது.

**2001 FO32** என அழைக்கப்படும் விண்வெளி பாறை கிட்டத்தட்ட அரை கிலோ மீற்றர் அகலமானது. இது உலகின் மிக உயரமான சிலையான இந்தியாவின் இரும்பு மனிதர் சர்தார் வல்லபாய் படேலின் சிலையை விட இரு மடங்கிற்கும் அதிகமாகும்.

**2001 FO32** என அழைக்கப்படும் இந்தக் கோள் பூமியிலிருந்து 1.25 மில்லியன் மைல்கள் தூரத்தில் பூமியைக் கடந்து சென்றுள்ளது.

பெரும்பாலான விண்கற்கள் பூமியைக் கடந்து செல்லும் வேகத்தைவிட **2001 FO32** இன் வேகம் அதிகமாகும். அதன்படி ஒரு மணி நேரத்திற்கு சுமார் 124000 கிலோமீற்றர் வேகத்தில் செல்லும் என்று நாசா தெரிவித்துள்ளது.

20 ஆண்டுகளுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட இந்தச் சிறுகோள் சுமார் 900 மீற்றர் (3000அடி) விட்டம் கொண்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

440 மீற்றர் முதல் 680 மீற்றர் வரைஅகலங்கொண்ட இந்தச்சிறுகோளின் வேகம் மணிக்கு 123876 கிலோ மீற்றராகும்.

அடுத்த முறை **2001 FO32** சிறுகோள் 2052 ஆம் ஆண்டில் பூமியை அண்மித்து பயணிக்கும் என்றும் நாசா கூறியுள்ளது. (நி-4-8)

## மகாத்மா காந்திக்கு கனடாவில் ஐஸ்சிலை



(ஒட்டாவா)

இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு கனடாவில் மகாத்மா காந்திக்கு ஐஸ் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

கனடாவின் கியூபக் நகரில் உள்ள பிரபல ஹோட்டலில்தான் மகாத்மா காந்தியின் ஐஸ் சிலை நிறுவப் பட்டுள்ளது.

இந்த சிலையின் உயரம் ஏழு அடி. மார்க் லெபயர் என்ற ஐஸ் சிற்பக்கலை வல்லுநரால் இந்த சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஒன்பது பிளாக் ஐஸ் களை பயன்படுத்தி ஐந்து மணி நேரத்தில் இச்சிலையை உருவாக்கிவிட்டதாக கூறப்படுகிறது. (நி-4-8)

# மாகாண சபைத் தேர்தல் வெறும் பேசு பொருளாகவே உள்ளது

# ஜனாதிபதி, பிரதமர் விரைவாக முடிவெடுக்க வேண்டும்

## தேர்தலுக்கான மக்கள் இயக்கம் வலியுறுத்து

(கொழும்பு)

**மாகாண சபைத் தேர்தல் கடந்த மூன்று வருடங்களாக வெறும் பேசு பொருளாகவே உள்ளது. ஆகவே அவ் விடயத்தில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் விரைவான தீர்மானத்தை எடுக்க வேண்டுமென சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் வலியுறுத்தி உள்ளது.**

மாகாண சபைத் தேர்தல் விவகாரம் தொடர்பாக அவ் வமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது, இலங்கையிலுள்ள 9 மாகாண சபைகளினதும் உத்தியோகபூர்வ கால எல்லை நிறைவுக்கு வந்து பல வருடங்களைக் கடந்துள்ளது.

அதாவது மேல் மாகாணம், மத்திய மாகாண்ம், தென் மாகாணம், வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம், வடமேல் மாகாணம், வடமத்திய மாகாணம், ஊவா மாகாணம், சப்ரகமுவ மாகாணம் ஆகியவற்றின் கால எல்லைகள் நிறைவுக்கு வந்துள்ளன.

இந்நிலையில் குறித்த தேர்தலினை நடத்துவது தொடர்பாக ஒழுங்கான கருத்துக்களை அரசாங்கம் முன்வைக்காமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

அரசாங்கத்தில் அங்கத்துவம் வகிக்கக்கூடிய பாராளுமன்ற உறுப்பினர்களே மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக முரண்பாடான கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

மாகாண சபை முறைமை இலங்கை தேர்தல் முறையில் இருக்கின்றபோது இந்தத் தேர்தலை பல வருட காலமாக நடத்தாமல் இருப்பது ஜனநாயகத்தை கேள்விக்கு உள்ளாக்கும் விடயமாகும். எனவே இந்த மாகாண சபை தேர்தல் தொடர்பாக விரைவான தீர்மானத்தை எடுப்பது ஜனாதிபதி மற்றும் பிரதமர், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் முக்கிய பொறுப்பாகும் என அவர் குறிப்பிட்டார். (நி-4)

## கழிவுத் தேயிலை களஞ்சியசாலை சுற்றிவளைப்பு

(ஹற்றன்)

பூண்டுலோயா கும்பாலொலுவ பகுதியில் மிகவும் சூட்சுமமான முறையில் இயங்கி வந்த கழிவுத் தேயிலை களஞ்சியசாலை ஒன்றை சுற்றிவளைத்த தலவாக்கலை விசேட அதிரடிப்படையினர் 4 ஆயிரத்து 195 கிலோ கழிவுத் தேயிலையையும் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கழிவுத் தேயிலையை குறித்த நிலையத்துக்குக் கொண்டு வந்து தூய தேயிலை என்ற போர்வையில் சந்தைக்கு விற்பனைக்கு அனுப்பியுள்ளனர் என விசேட அதிரடிப்படையினர் தகவல் வெளியிட்டனர்.

அத்துடன் கைப்பற்றப்பட்ட கழிவுத் தேயிலை தூளையும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களையும் சட்ட நடவடிக்கைகளின் நிமித்தம் பூண்டுலோயா பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் கையளித்தனர். (நி-4)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2261

Search for people, places and things

### சோபனா




### தர்ஷி




### ஜனா




### பிரியா




### சிந்துபா




### பத்மன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நாட்டில் தேயிலை உற்பத்தி அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்து இலங்கையின் தேயிலை உற்பத்தி நூற்றுக்கு 23 என்ற வீதத்தில் அதிகரித்துள்ளது.

பெப்ரவரி மாதத்திலிருந்து நாட்டில் தேயிலை உற்பத்தி 22.3 மில்லியன் கிலோகிராம் பதிவாகியுள்ளதுடன், கடந்த வருடம் 18.2 மில்லியன் கிலோகிராம் பதிவாகியுள்ளது.

ஜனவரி மற்றும் பெப்ரவரிஆகிய இரு மாதங்களுக்குள் இலங்கையிலிருந்து 44 மில்லியன் கிலோகிராம் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் முதல் இரு மாதங்களில் தேயிலை ஏற்றுமதி வருவாய் 41 பில்லியன் ரூபாவை கடந்ததுடன், இது கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 3.36 பில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளது.

பெப்ரவரியில் ஒரு கிலோ தேயிலையின் சராசரி விலை 940 ரூபாவாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# சினோபார்ம் தடுப்பூசிக்கு வழங்கப்பட்ட அனுமதி பிற்போடப்பட்டது

(கொழும்பு)

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான தடுப்பூசிக்கு பல சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளன.

அந்த வகையில் சீனாவில் தயாரிக்கப்பட்ட கொரோனாத் தடுப்பூசியான சினோபார்ம் தடுப்பூசிக்கு இலங்கையில் வழங்கப்பட்ட அவசரகால அனுமதி பிற்போடப்பட்டுள்ளது.

தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையம் இந்த தகவலை கூறியதாக மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குமுறை இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜெயசுமன தெரிவித்தார்.


இதன் விளைவாக, சீனா நன்கொடையாக வழங்க வேண்டிய சுமார் 6 இலட்சம் டோஸ் தடுப்பூசி அவசரகால பயன்பாட்டு ஒப்புதல் இல்லாமல் இலங்கைக்கு விமானம் மூலம் அனுப்பப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் சீனாவின் தடுப்பூசிக்கு இலங்கையில் ஒப்புதல் அளிக்க சீனா இலங்கை மீது அழுத்தம் கொடுத்து வருவதாக ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

எவ்வாறாயினும், சீனாவிலிருந்து வரும் நன்கொடைகள் இலங்கையை தளமாகக் கொண்ட நூற்றுக்கணக்கான சீன நாட்டினருக்கு போட மட்டுமே பயன்படுத்தப்படும் என்று சுகாதார அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன. (நி-4)

# அரசியல் சூழ்ச்சியினால் ஆட்சி மாற்றத்தை இனியொருபோதும் ஏற்படுத்த முடியாது

(கொழும்பு)



வில்பத்து காடழிப்புக்கு ஆதரவாக செயற்பட்டவர்கள் இன்று சூழலியலாளர்களாக இயற்கையினை பாதுகாப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கத்துக்கு எதிராக குரல் கொடுக்கிறார்கள்.

2014 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த குறிப்பிடப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுக்களும் தற்போது இரண்டாம் பாகமாக தோற்றம் பெற்றுள்ளது. அரசியல் சூழ்ச்சியினால் ஆட்சி மாற்றத்தை இனியொருபோதும் ஏற்படுத்த முடியாது என கைத்தொழில் வளங்கள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அத்துருகிரிய பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பல்வேறு சவால்களுக்கு மத்தியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் பலமான அரசாங்கம் தோற்றம் பெற்றுள்ளது. கொவிட்-19 வைரஸ் தாக்கம் குறுகிய காலத்தில் பாரிய சவால்களை ஏற்படுத்தியுள்ளது. சிறந்த திட்டமிடலின் ஊடாக அனைத்து சவால்களும் வெற்றி கொள்ளப்பட்டு நாடு தற்போது வழமை நிலைக்கு திரும்பியுள்ளது.

அரசியல் மற்றும் சமூக களத்தில் காடழிப்பு விவகாரம் பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது. வெளிநாடுகளில் அழிக்கப்பட்டுள்ள காடுகளின் புகைப்படங்களை கொண்டு தற்போது போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

வில்பத்து காடு அரசியல்வாதிகளினால் திட்டமிட்டு அழிக்கப்படும் போது அதற்கு ஆதரவாக செயற்பட்டவர்கள் இன்று இயற்கையை பாதுகாக்கும் சூழலியலாளர்களாக அரசாங்கத்துக்கு எதிராக குரல் கொடுக்கிறார்கள்.

வனப் பகுதிகளை அண்மித்த பகுதிகளில் அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்கும் போது அதனையும் சுற்றுசூழல் அழிப்பு செயற்பாடு என போர்கொடி தூக்குகிறார்கள். ஜனாதிபதியின் கிராமத்துடனான உரையாடல் செயற்திட்டத்தை பலவீனப்படுத்தும் வகையில் திட்டமிட்ட வகையில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இயற்கை வளங்கள் ஏதும் அழிக்கப்படவில்லை. சுபீட்சமான இலக்கு கொள்கை திட்டத்தில் இயற்கையினை பாதுகாக்க குறிப்பிடப்பட்ட விடயங்கள் பல தற்போது செயற்படுத்தப்பட்டுள்ளன. நாட்டு மக்களுக்கான அபிவிருத்தி பணிகளையும் எதிர்த் தரப்பினர் அரசியல் இலாபத்துக்கு பயன்படுத்திக் கொள்வது கவலைக்குரியது என அவர் தெரிவித்தார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

## தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பக்தி போகின்ற பாதை!

சந்நியாசி ஒரு நாள் கனவு கண்டார். அந்தக் கனவிலே அவர் சொர்க்கத்துக்குப் போகின்றார். அங்கே ஒரு பெரிய திருவிழா நடந்து கொண்டிருந்தது.

எங்கே பார்த்தாலும் அலங்கார வளைவுகள்... வண்ணமயமான விளக்குகள்... பாதைகள் பூராகவும் மலர்கள்... எல்லாக் கட்டடங்களிலும் ஒளிமயம்.

அவ்வளவு கோலாகலமாக ... பிரம்மாண்டமாக... அந்தத் திருவிழா நடந்துகொண்டிருந்தது.

அது என்ன திருவிழா என்று இந்த சந்நியாசிக்குப் புரியவில்லை. அங்கே எதிரில் வந்து கொண்டிருந்த ஒருவரை நிறுத்தி "என்ன விசேஷம் இங்கே?" என்று கேட்டார்.

"உனக்குத் தெரியாதா விஷயம்? இன்றைக்கு இறைவனுக்குப் பிறந்த நாள்...அதைத் தான் எல்லோரும் சேர்ந்து கொண்டாடுகின்றோம்.அதற்காக பிரம்மாண்டமான ஊர்வலம் ஒன்று வரப்போகின்றது. இறைவனே அந்த ஊர்வலத்தில் கலந்து கொள்கிறார்!" என்றார் அவர்.

உடனே அந்த சந்நியாசி ஒரு மரத்து நிழலில் ஒதுங்கி நின்று கொண்டார்.ஊர்வலம் வந்துகொண்டிருந்தது. முதலில் ஒரு குதிரை வந்துகொண்டிருந்தது. அதன் மேலே ஒருத்தர் உட்கார்ந்திருந்தார். அவருக்கு பின்னால் நிறையப் பேர் கூட்டமாக வந்துகொண்டிருந்தனர்.

"இவ்வளவு கூட்டம் அவருக்கு பின்னால் வருகிறதே யார் இவர்?" என்று கேட்டார்.ஒரு மதத்தின் பெயரைச் சொல்லி 'இவர் அந்த மதத்தின் தவைர்.அவரைப் பின்பற்றுகின்ற மக்கள் கூட்டம் பின்னால் வந்துகொண்டிருக்கிறது' என்று விபரம் சொன்னார்.

இவர்களுக்கு அடுத்த படியாக இன்னொரு குதிரையிலே ஒருவர் வந்து கொண்டிருந்தார். அவருக்கு பின்னாலும் ஏகப்பட்ட கூட்டம்.இவர் யார் என்று கேட்டார்? சந்நியாசி.

இன்னொரு மதத்தின் பெயரைச் சொல்லி "இவர் அந்த மதத்தின் தலைவர். அவருடைய வழியைப் பின்பற்றுகின்றவர்கள் அவர் பின்னால் கூட்டமாக வந்துகொண்டிருக்கிறார்கள்!" என்றார்.

இப்படி ஒவ்வொருத்தராக குதிரை மேலே வந்துகொண்டிருந்தார்கள். அவர்களைப் பின்பற்றியும் ஒவ்வொரு கூட்டம் வந்துகொண்டிருந்தது.அந்தப் பெரிய ஊர்வலம் போய்க் கொண்டே இருக்கு கடைசியாக அது முடிந்தது.அதற்குப் பின்பு கொஞ்ச நேரம் கழித்து ஒரு வயதான ஆள் குதிரை மேல் வந்து கொண்டிருந்தார்.ஆனால் அவருக்குப் பின்னால் யாருமே இல்லை. அவர் பரிதாபமாக தனியாக வந்து கொண்டிருந்தார். அவர் அந்த ஊர்வலத்தைச் சேர்ந்தவரா? இல்லையா? என்பது தெரியவில்லை.

இவர் யார் இவர் ஏன் இப்படி தனியாக வந்து கொண்டிக்கின்றார்? என்று கேட்டார் அந்த சந்நியாசி.என்ன இப்படி கேட்கின்றீர்கள் இவர் தான் கடவுள் இவருக்குத் தான் இன்றைக்குப் பிறந்தநாள்.. முன்னால் போகின்ற ஊர்வலம் முழுவதும் இவருடைய பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காகத்தான் என்றார்.

இதைக் கேட்டதும் அந்த சந்நியாசிக்குத் திடுக் என்று தூக்கிப் போட்டது. இதுவரைக்கும் கனவு கண்டு கொண்டிருந்தவர் முழித்துக் கொண்டார். அதன் பின்பு யோசித்துப் பார்த்தார். உண்மை தான்.மக்கள் எல்லோரும் பக்தி மார்க்கத்தில் போறதாக நினைத்துக் கொண்டு பாதை மாறி போய்க் கொண்டு இருக்கின்றார்கள் கடவுளை பின்பற்றுவதாக நினைக்கிறார்கள் பக்தர்கள். ஆனால் கடவுளுக்குப் பின்னால் யாருமே இல்லை.

இன்னமும் இயல்பாக இதைப்பற்றி யோசித்துப் பார்த்தால் உண்மைக்குப் பின்னால் தான் நான் போய்க் கொண்டிருக்கின்றேன் என்று நிறைய பேர் சொல்கின்றார்கள். ஆனால் அந்த உண்மை அனாதையாக போய்க் கொண்டிருக்கிறது. அப்படி ஆகிவிட்டது உலகம்.


இந்தக் காலத்திலேயும் ஒரு ஊர்வலம். ஒரு பெரிய மனிதருக்குப் பிறந்த நாள் விழா. அவர் குதிரை மேல் ஏறி முன்னாடி போய்க் கொண்டிருக்கின்றார். அவர் பின்னால் ஒரு நூறு பேர். போகின்றார்கள் எல்லாம் பணம் கொடுத்து ஏற்பாடு செய்தவர்கள்.

கொஞ்ச் தூரம் நடந்ததும் கால் வலிக்க ஆரம்பித்தது. ஒவ்வொருத்தராக ஒதுங்க ஆரம்பித்தார்கள். ஒரு கட்டத்திலே குதிரையில் போனவர் தற்செயலாக திரும்பிப் பார்க்கின்றார்.

பின்னாடி யாருமே இல்லை. எல்லோரும் ஓடிப்போய் விட்டார்கள். ஒரே ஒரு ஆள் மட்டும் மிகவும் விசுவாசமாக பின்னால் நடந்து வந்து கொண்டிருந்தான்.நீ வீட்டுக்குப் போகவில்லையா? என்று கேட்டார் அவர். நீங்கள் அந்த குதிரையையும்- அதற்குரிய வாடகைப் பணத்தையும் கொடுத்துவிட்டீர்கள் என்றால் நானும் போய் விடுவேன் என்றான் அவன்.

13

# புதிய கலப்பு விகிதாசார தேர்தல் முறைமையும் கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலும் - 2018



**கலாநிதி க.தவலிங்கம்** ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

எனவே வட்டார முறை மூலம் 66 பேர் தெரிவு செய்யப்படவுள்ள நிலையில் அதில் 11 பேர் கட்டாயம் பெண் வேட்பாளர்களாக கள மிறக்கப்படவேண்டும்.

அதேபோன்று விகிதாசார முறைமையில் களமிறக்கப்படும் வேட்பாளர்களில் 50 வீதமானவர்கள் பெண்களாக இருக்க வேண்டும். அதாவது கொழும்பு மாநகரசபைக்கு விகிதாசாரம் மூலம் 47 வேட்பாளர்கள் களமிறக்க வேண்டிய நிலையில் அதில் 23 பேர் பெண்களாக இருக்க வேண்டியது சட்டமாகும்.

அப்படியாயின் மொத்தமாக கொழும்பு மாநகரசபைக்கு 66+47 என்ற வகையில் 113 வேட்பாளர்கள் களமிறக்கப்பட வேண்டியுள்ள நிலையில் அதில் 34 பேர் பெண்களாக இருக்க வேண்டும் என்பது சட்டம். இந்த விகிதம் மாறியமைந்தால் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுவிடும்.

### வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படல்.

### முழு வேட்புமனுவும் நிராகரிக்கப்படுதல்.

வேட்புமனு முழுமையாக நிராகரிக்கப்படும் சந்தர்ப்பங்களை முதலில் பார்ப்போம். கொழும்பு மாநகர சபையை உதாரணமாக எடுத்தோமானால் 113 வேட்பாளர்கள் மொத்தமாக வேட்புமனுவின் இரண்டு பகுதிகளிலும் உள்ளடக்கப்படாவிடின் குறித்த வேட்புமனு முழுமையாக நிராகரிக்கப்படும். தேவையான பெண் பிரதிநிதித்துவங்கள் குறிப்பிட்ட வீதத்தில் இடம்பெறாவிடின் வேட்புமனு முழுமையாக நிராகரிக்கப்படும். அதாவது கொழும்பு மாநகரசபைக்கு வட்டார முறையில் 11பெண் வேட்பாளர்களும் விகிதாசார முறையில் 23 பெண் வேட்பாளர்களும் நியமிக்கப்படாவிடின் வேட்புமனு முழுமையாக நிராகரிக்கப்படும்.

கட்டுப்பணம் உரியமுறையில் செலுத்தப்படாவிடின் அப்போதும் முழுமையான வேட்பு மனுவும் நிராகரிக்கப்படும்.

அடுத்ததாக அரசியல் கட்சியாக இருப்பின் செயலாளரும் சுயேட்சைக் குழுவாக இருப்பின் அதன் தலைவரும் கைச்சாத்திடவேண்டும். இல்லாவிடின் முழுமையாக வேட்புமனு நிராகரிக்கப்படும். இவர்களின் கையொப்பத்தை ஒரு சமாதான நீதிவான் முறையாக அத்தாட்சிப்படுத்த வேண்டும். இல்லாவிடின் அப்போதும் வேட்புமனு முழுமையாக நிராகரிக்கப்படும்.

வேட்புமனுவை கட்சியென்றால் செயலாளரும்,அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்டமுகவரும், சுயேட்சைக் குழுவென்றால் அதன் தலைவரும் தெரிவத்தாட்சி அலுவலரிடம் கையளிக்க வேண்டும். இவர்களைத் தவிர்த்து வேறுயாராவது கையளித்தால் அந்த வேட்புமனு முழுமையாக நிராகரிக் கப்படும்.

### வேட்புமனுவில் ஒருவர் மட்டும் நிராகரிக்கப்படுதல்

தற்போது தனிப்பட்ட ரீதியில் வேட்பாளர்களின் வேட்புமனு நிராகரிக்கும் சந்தர்ப்பத்தை பார்ப்போம். கொழும்பு மாநகரசபையானால் 113 வேட்பாளர்களும் வேட்புமனுவில் கையொப்பமிட வேண்டும். அதில் ஒருவர் கையெழுத்திடாவிடின் அவருடைய பெயர் மட்டும் வேட்புமனுவிலிருந்து நிராகரிக்கப்படும். ஏனையவர்களுக்கு அதில் பாதிப்பு ஏற்படாது. அதேபோன்று இந்த நாடு இரண்டாக பிளவுபடுவதற்கு எதிராக வேட்பாளர் ஒரு உறுதியுரை செய்ய வேண்டும். அதனை வழங்கத்தவறினால் அந்தவேட்பாளர் மட்டும் நிராகரிக்கப்படுவார்.

அந்த உறுதியுரையை வழங்கி அதில் அவர் கையொப்பமிடாவிடின் அவருடைய பெயர் மட்டும் நிராகரிக்கப்படும். அதே போன்று கடந்த தேர்தல் முறையில் இளைஞர்கள் 40 வீதம் உள்ளீர்க்கப்படவேண்டும் என்ற சட்டம் இருந்தது. இம் முறை அது 30 வீதமாக மாறியுள்ளது. ஆனால் அதுகட்டாய மாக்கப்படவில்லை. எனினும் ஒரு கட்சி தான் ஒரு இளைஞரைக் களமிறக்குவதாக குறிப்பிட்டால் அந்த வேட்பு மனுவில் பிறப்புச்சான்றிதழிலில் அவர் இளைஞராக இருக்காவிடின் (வயது மட்டம் சட்டத்தில் உள்ளது) அவர் மட்டும் வேட்பு மனுவிலிருந்து நிராகரிக்கப்படுவார்.

### உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தனில் வேட்பாளர்களாவதற்குரிய தகைமையீனங்கள் யாவை ?

வேட்பாளர்களாவதற்குரிய தகைமையீனங்கள்

(i) இலங்கைப் பிரஜையாக இல்லாதிருத்தல்

(ii) 18 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்கள்

(iii) நீதிமன்ற அலுவலராக இருத்தல்

(iv) ஆயுதந் தாங்கிய இராணுவத்தினராக இருத்தல்

(v) பொலிஸ் உத்தியோகத்தராக இருத்தல்

(vi) 2007 ஜுன் 01 ஆந் திகதிக்குரிய சம்பள அளவுத் திட்டத்தின் ஆரம்பச் சம்பளம் வருடத்திற்கு 2,27,280 ரூபாவுக்குக் (மாதம் 18,940 ரூபா) குறையாத சம்பளம் பெறும் அரச திணைக்கள மொன்றில் கடமையாற்றும் அரச அலுவலர் ஒருவர் அல்லது அத் தினத்திற்குப் பின்னர் உருவாக்கப்பட்ட பதவியொன்றில் ஆரம்பச் சம்பளத்தில் கடமையாற்றும் அரச அலுவலராக இருத்தல்.

(vii) 2009 ஜனவரி 01 ஆந் திகதிக்குரிய சம்பள அளவுத் திட்டத்தின் ஆரம்பச் சம்பளம் வருடத்திற்கு 2,46, 300 ரூபாவிற்குக் (மாதம் 20,525 ரூபாய்) குறையாத அல்லது அதற்கு சமாந்தரமான ஆரம்பச் சம்பளம் பெறும் அரச கூட்டுத்தாபனமொன்றில் கடமையாற்றும் அலுவலராக இருத்தல்.

(viii) குறித்த உள்ளூராட்சி அதிகார சபையில் கடமையாற்றும் அலுவலர் அல்லது சிற்றூழியர் ஒருவர் உள்ளூராட்சி அதிகார சபைக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்னர் ஒரு வருட காலத்தினுள் சேவையை முடிவுறுத்தாதிருத்தல்.

(ix) குறித்த உள்ளூராட்சி அதிகார சபைக்காக வேட்புமனுத் தாக்கல் செய்யவுள்ள தேர்தலுக்கு ஒரு வருடத்திற்கு முன் குறித்த உள்ளூராட்சி அதிகார சபையில் கடமையாற்றுவதிலிருந்து கேட்டு விலகாமலிருத்தல் மற்றும் அவ் உள்ளூராட்சி அதிகார சபைக்குரிய நிர்வாகப் பிரதேசத்தில் வெளிக்கள அலுவலராகத் தொடர்ந்தும் கடமையில் இருத்தல்.

(x) குறித்த உள்ளூராட்சி அதிகார சபைக்காக செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள், ஒப்புதல்கள் இருப்பின் அல்லது குறித்த உள்ளூராட்சி அதிகார சபையிலிருந்து ஏதேனும் கமிஷன் கொடுப்பனவுகள் பெற்றுக் கொள்பவராக இருத்தல் (ஓய்வூதியம் அல்லது பணிக்கொடை போன்றவை இதிலடங்காது)

(xi) மனநிலை பாதிக்கப்பட்டவரென சட்ட ரீதியாக உறுதிப்படுத்தப்பட்ட ஒருவராக இருத்தல்

(xii) சொத்துக்களை இழந்தவரென சட்ட ரீதியாக உறுதிப்பட்ட ஒருவராக இருத்தல்

(xiii)12 மாதங்களுக்கு மேலாக சிறைக் கைதியாக இருத்தலும், தண்டனை வழங்கக்கூடிய குற்றவாளியாக சிறையில் இருப்பவரும்

(xiv)குறித்த கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் தேர்தல் குற்றம் புரிந்து தண்டனை பெற்ற ஒருவரது ஐந்து வருடத் தண்டனைக் காலம் முடிவுறாதிருத்தல்

(xv) மக்கள் நிறுவனம் (ஊழல் தவிர்த்தல்) கட்டளைச் சட்டத்தின் 05 பிரிவின் பிரகாரம் பரிசீலனை ஆணைக்குழுவினால் தகுதியற்றவர் எனத் தீர்ப்பு வழங்கப்பட்ட ஒருவராக இருத்தல்

(xvi)குற்றத் தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றவாளியாக்கப்பட்டு மூன்று மாதங்களுக்கு மேலாக சிறைக்கைதியாக இருப்பவர் அல்லது தண்டனை பெற்று ஐந்து வருட காலம் முடிவுறாதிருத்தல்

(xvii) ஒன்றுக்கு மேற்பட்ட வேட்புமனுக்களில் தமது பெயரை அபேட்சகராகக் குறிப்பிடப்பட்டிருத்தல்

(xviii)1946 ஆம் ஆண்டின் இலங்கை அரச சபைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றவாளியாக்கப்பட்டு, அக் கட்டளைச் சட்ட விதிமுறைகளின் பிரகாரம் தகுதியற்றவர் எனத் தீர்மானிக்கப்பட்டிருத்தல்.

(xix)இலங்கை அரசியல் யாப்பின் 91(1)(எ) அத்தியாயத்தின் பிரகாரம் தகுதியற்றவராக்கப்பட்டிருத்தல்

(xx) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 277 ஆம் பிரிவு, நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 ஆம் பிரிவு, பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 179 ஆம் பிரிவு ஆகியவற்றின் பிரகாரம் வெளியிடப்பட்டுள்ள விதிகளுக்கமைவாக, குறித்த தினத்தின் பின்னர் விலக்கப்பட்டவர், விலக்கப்பட்ட தினத்திலிருந்து ஐந்து வருட காலம் வரை தகுதியற்றவராகக் கணிக்கப்படும்

### வாக்குச் சீட்டின் தோற்றம் எவ்வாறுஅமைந்திருக்கும்?

தேர்தலில் போட்டியிடவுள்ள சகல அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் பெயர்களும் சிங்களமொழி அகராதியின் பிரகாரம் ஒழுங்குபடுத்தப்பட்டு வாக்குச் சீட்டில் மும்மொழிகளிலும் குறிப்பிடப்படுவதுடன்,அதற்குக் கீழே தேர்தலில் போட்டியிடவுள்ள சுயேட்சைக் குழுக்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட இலக்கங்களின் பிரகாரம் சுயேட்சைக் குழுக்களது இலக்கங்களுடன் குறிப்பிடப்படும்.


வாக்குச் சீட்டில் கட்சிகளின் பெயர்களுக்கு முன்பாகவும்,சுயேட்சைக் குழுக்களுக்கு முன்பாகவும் அங்கீகரிக்கப்பட்ட தேர்தல் சின்னங்கள் அச்சிடப்படுவதுடன், அச்சின்னங்களுக்கு முன்பாக புள்ளடி இடுவதற்கான வெற்றுக் கூடும் அச்சிடப்படும்.(விருப்பு வாக்குக்கான வெற்றுக்கூடோ,மற்றும் வேட்பாளர்களின் பெயர்களோ வாக்குச்சீட்டில் இருக்காது).

தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்கள் யாரென்பதை வாக்காளர்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு வட்டார மட்டத்திலும் விகிதாசார மட்டத்திலும் தயாரிக்கப்பட்டுள்ளஅட்டவணையின் கீழ் கட்சிகளது, சுயேட்சைக் குழுக்களது அபேட்சகர்களின் பெயர்ப்பட்டியல் வாக்காளர்களது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையுடன் வீடுகளுக்கு விநியோகிக்கப்படும்.

இது தவிர குறித்த அட்டவணையில் உள்ளபடி கட்சிகளது, சுயேட்சைக் குழுக்களது அபேட்சகர்களின் பெயர்ப்பட்டியல் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு குறித்த வாக்களிப்பு நிலையங்களின் காட்சிப்படுத்தப்படும். இதன் பிரகாரம் அபேட்சகர்களின் பெயர் கள் வாக்குச் சீட்டில் குறிப்பிடப்படாது விடினும், தமது வாக்கினை அளிக்க விருக்கும் கட்சியின் அல்லது குழுவின் அபேட்சகர் தொடர்பாகவும், மேற் குறிப்பிட்ட அட்டவணையின் மூலம் தாம் விரும்பிய அபேட்சகர் யாரென்பதனையும் அறிந்து கொள்ளமுடியும்.

(தொடரும்)

# காகித பற்றாக்குறை நாட்டில் ஏற்பட்டுள்ளது



## அச்சீட்டாளர் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது காகித பற்றாக்குறை நிலவுவதாக இலங்கை அச்சீட்டாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன் காகிதத்தின் விலையும் 30 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் டிலான் சில்வா தெரிவித்தார்.


கொள்கலன்களின் பற்றாக்குறை காரணமாக காகித இறக்குமதிக்கு அதிக செலவு ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சீனா, இந்தியா, இந்தோனேசியா மற்றும் கொரியா ஆகிய நாடுகளில் இருந்து பெரும்பாலான காகிதங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

இந்நிலையில் இந்தியாவிலும் காகித பற்றாக்குறை நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நீண்டகால குத்தகை அடிப்படையில் ஏற்றுக் கொண்டுள்ள விடயங்களை அச்சிடுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் தற்போது இருப்பிலுள்ள காகிதங்கள் சிறிது காலத்திற்கு மாத்திரமே பயன்படுத்த முடியுமெனவும் இலங்கை அச்சீட்டாளர்கள் சங்கத்தின் தலைவர் டிலான் சில்வா தெரிவித்தார். (நி-4)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி



## தீபம் ஏற்றுவதன் தத்துவம்

ஆலயத்துக்குச் செல்கிறோம். ஆண்டவனிடம் சரண் அடைகிறோம். அவன் அருள் பெற எத்தகைய வழிபாடு முறைகள் உள்ளதோ...அத்தனையையும் செய்கிறோம்.

வசதி இருப்பவர்கள் அபிஷேகம், ஆராதனை செய்கிறார்கள். இயலாதவர்கள் ஒரு முழம் பூ வாங்கிக் கொடுத்து திருப்திப்பட்டுக் கொள்கிறார்கள்.

இறை வழிபாட்டுக்கு நாம் எவ்வளவு செலவு செய்கிறோம் என்பது முக்கியமே அல்ல. நம் மனதை இறைவனிடம் எந்த அளவுக்கு ஒப்படைக்கிறோம் என்பதே முக்கியம்.

இறைவனிடம் நம் மனதை இரண்டறக் கலக்க எத்தனையோ வழிகள் உள்ளன. அதில் தனிச்சிறப்புக் கொண்டது ஆலய வழிபாட்டின்போது தீபம் ஏற்றி வழிபாடு செய்வது. ஆலயத்துக்குச் செல்பவர்களில் பெரும்பாலானவர்கள் விளக்கு ஏற்றி வைத்து வழிபடுவதில்லை.

ஆனால் "ஒளியே கடவுள்" என்று நம்பும் பக்தர்கள் தீபம் ஏற்றத் தவறுவதில்லை.

மனிதன் முதன் முதலில் இயற்கையை இறைவனாகக் கருதி வழிபாடு செய்தான். குறிப்பாக அக்னியை இறை அம்சமாகக் கருதினார்கள்.

வேதங்களில் மிகப் பழைமையான வேதமான ருக் வேதம் அக்னியை மிகவும் போற்றுகிறது. சங்க கால நூல்களிலும் அக்னி வழிபாடு பற்றிக் கூறப்பட்டுள்ளது.

ஒளி வடிவில் இறைவன் உள்ளான் என்பதனையே இவை நமக்குக் காட்டுகின்றன. மாணிக்கவாசகர் இறைவனை "ஒளிவளர் விளக்கே" என்றும் "ஜோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே" என்றும் போற்றுகிறார்.

ஆகையால் ஆலயத்துக்குச் செல்லும் போது பஞ்சபூதங்களில் அக்னியின் அம்சமாக விளங்கும் தீபம் ஏற்றுவதை ஒவ்வொருவரும் முக்கிய கடமையாகக் கொள்ள வேண்டும்.

எவ்வளவோ செலவு செய்யும் நம்மால் நம் இறைவனுக்கு மனம் உவந்து ஒரு அகல் விளக்கு ஏற்ற முடியாதா?

நமிநந்தியடிகள், கணம் புல்லர், கலிய நாயனார் ஆகியோர் கோவில்களில் விளக்கு ஏற்றிச் சேவை செய்ததால் முக்திப்பேறு பெற்றனர்.

ஆலயத்தில் தீபம் ஏற்றினால் வாழ்வில் மேன்மை பெறலாம் என்பதற்கு எத்தனையோ உதாரணங்கள் உள்ளன. எடுத்துக் காட்டுக்கு ஒன்று...

வேதாரண்யம் வேதபுரீஸ்வரர் கோவிலில் இருந்த விளக்குக் கொஞ்சம் கொஞ்சமாக மங்கலானது. சிறிது நேரத்தில் அணைந்து விடும் நிலை ஏற்பட்டது.

அப்போது விளக்கில் இருக்கும் நெய்யைக் குடிக்க ஒரு எலி வந்தது. அது தன் மூக்கால் திரியை முன்பக்கமாக நகர்த்தி விட்டதால் தீபம் மீண்டும் பிரகாசமாக எரியத் தொடங்கியது.

இதனால் அந்த எலியை அடுத்த பிறவியில் மகாபலி சக்கரவர்த்தியாக இறைவன் பிறக்கச் செய்தார்.

எனவே யார் ஒருவர் ஆலயத்தைத் தீபம் ஏற்றி பிரகாசப்படுத்துகிறாரோ அவர் வாழ்வும் பிரகாசமாகும். தீபத்தில் துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி மூன்று சக்திகளும் உள்ளனர்.

எனவே தினமும் ஆலயம் சென்று தீபம் ஏற்றினால் பாவங்கள் விலகும். ஞானமும் மேன்மையும் தேடி வரும். தீய சிந்தனைகள் வரவே வராது.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## கொரோனாத் தொற்றையடுத்து மூடப்படுகிறது பாடசாலை

(காலி)

காலி மாவட்டத்தின் எல்பிட்டிய பகுதியில் உள்ள பாடசாலையொன்றின் அதிபருக்கு நேற்று முன்தினம் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து குறித்த பாடசாலை மூடப்படும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எல்பிட்டியவில் உள்ள ஒரு பிரதான பாடசாலையின் அதிபர் மற்றும் அதே பகுதியில் உள்ள கனிஷ்ட பாடசாலையின் அதிபராக இருக்கும் அவரது மனைவி ஆகியோருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது. முதன்மை பணிகள் நடைபெறும் கனிஷ்ட கல்லூரியின் ஏழு ஆசிரியர்களும் தனிமைப் படுத்தப்படவுள்ளதுடன், பாடசாலையும் மூடப்படுகிறது. (நி-4)

## மான் இறைச்சி, துப்பாக்கியுடன் புசல்லாவயில் நால்வர் கைது

(கம்பளை)

புசல்லாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புரட்டப் தோட்ட பிரதேசத்தில் மான் வேட்டையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் நால்வரை கம்பளை, புசல்லாவ பொலிஸார் இணைந்து கைது செய்துள்ளனர். சந்தேக நபர்கள் பயணித்த கார், வேட்டையாடப்பட்ட 60 கிலோ கிராம் மான் இறைச்சி, இங்கிலாந்து நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி என்பனவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (நி-4)

## 90 ஆயிரத்தை தாண்டியது தொற்றாளர் எண்ணிக்கை

(கொழும்பு)

இலங்கையில் கடந்த 24 மணித்தியாலங்களில் மேலும் 342 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து இலங்கையில் இதுவரை தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 90 ஆயிரத்து 200 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அவர்களில் 86 ஆயிரத்து 759 பேர் தொற்றில் இருந்து பூரண குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ள நிலையில் தொற்றுக்கு உள்ளான 2 ஆயிரத்து 895 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (நி-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 140 | 130 | 140 | 140 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 160 | 140 | 180 | 200 |
| தக்காளி | 100 | 80 | 90 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 70 | 50 |
| கோவா | 100 | 100 | 120 | 120 |
| கரட் | 160 | 200 | 180 | 240 |
| பூசணி | 50 | 80 | 60 | 80 |
| புடோல் | 100 | 100 | 120 | 120 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 150 | 160 | 100-250 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 90 | 80 |
| பாகற்காய் | 180 | 250 | 250 | 200 |
| வெண்டிக்காய் | 140 | 150 | 150 | 160 |
| கருணைக் கிழங்கு | 120 | 110 | -- | 150 |
| பயற்றங்காய் | 160 | 200 | 230 | 200 |
| லீக்ஸ் | 100 | 110 | 120 | 120 |
| பீற்றூட் | 100 | 70 | 100 | 120 |
| கறிமிளகாய் | 200 | 160 | 200 | 160 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 800 | 800 |
| போஞ்சி | 180 | 140 | 180 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 120 | -- | 120 |
| கீரை - 1 பிடி | 50 | 60 | 30-40 | 50 |
| தேசிக்காய் | 100 | 150 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 40-60 | 50-70 |
| இராசவள்ளி | 250 | 250 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 160 | 100 | 150 | 160 |
| முள்ளங்கி | 50 | 60 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 40 | 100 | 20 | 30 |
| ஈரப்பலா | 140 | 100 | -- | 120 |

# புதிய தொழில்நுட்ப முறைகளை
## உருவாக்கும் போதுதான் உற்பத்தியில் புரட்சி ஏற்படும்



(நல்லூர்)

நவீன தொழில்நுட்ப முறையிலான உற்பத்தி செலவினைக் குறைப்பதற்கான வழிவகையினையும் விவசாயிகள், கால்நடை உற்பத்தியாளர்கள் உட்பட்டவர்களுக்கு பயிற்றுவித்து பாரம்பரியமாக இருந்து வந்த விவசாய முறைகளை மாற்றி புதிய தொழில் முயற்சிகளை உருவாக்கும் போதுதான் வடமாகாண உற்பத்தித்துறையில் பாரியதொரு புரட்சியினை எதிர்காலத்தில் ஏற்படுத்த முடியும் என வடமாகாண ஆளுநர் திருமதி.பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்தார்.

நேற்றைய தினம் இடம்பெற்ற நியமனக்கடிதம் வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் பல்வேறு சர்வதேச மூதலீடுகள் செய்யப்படுகின்ற வேளையில் முதலீட்டு வலயங்களுக்குள்ளே தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு சர்வதேச ரீதியான கல்வியினை எதிர்காலத்தில் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் வழங்க முன்வர வேண்டும்.

எனவே மாறிவரும் உலகத்திற்கு ஏற்ப அதனூடான சிந்தனைக்கு ஏற்ப மாறிவரும் சவாலுக்கு ஏற்ப எங்களை நாங்கள் மாற்றிக் கொள்கின்ற நிலைமைக்கு மாற வேண்டும். இல்லாவிட்டால் எதிர்கால இளைய சந்ததிகளை விரக்தியின் விளிம்புக்குத் தள்ளுகின்றவர்களாக நாங்கள் மாறிக்கொண்டு இருக்கின்றோம்.

உலகத்திலே ஒப்பிட்டு ரீதியாக பார்க்கின்றபோது விவசாயம், கால்நடை என்ற இரண்டு விடயங்களிலே உற்பத்தித் துறையில் இலங்கையில் வடமாகாணத்தில் பல்வேறு சவால்களை முன்னெடுத்து கொண்டிருக்கின்றோம். இதற்கான காரணமாக விவசாயத்துறையில் தொழில்நுட்பத் துறையினை சரியாகக் கடைப்பிடிக்கவில்லை.

பிராந்திய நாடுகளின் உற்பத்தியினை விட எமது நாட்டின் உற்பத்தித்திறன் செலவு பலமடங்காக அதிகரித்துச் செல்கின்றது. இதனை மாற்ற வேண்டுமானால் நவீன தொழில்நுட்ப முறைகளையும் உற்பத்திச் செலவினைக் குறைப்பதற்கான வழிவகையினையும் விவசாயிகள், கால்நடை உற்பத்தியாளர்கள் என்போருக்கு பயிற்றுவித்து பாரம்பரியமாக இருந்து வந்த விவசாய முறைகளை மாற்றி புதிய தொழில் முயற்சிகளை உருவாக்கும் போதுதான் வடமாகாண உற்பத்தித்துறையில் பாரியதொரு புரட்சியினை ஏற்படுத்த முடியும் எனத் தெரிவித்தார். (5-4-33)

# வடிகால் தூர்வாரும் பணிகளின் முதலாம் கட்டம் நிறைவு

(குப்பிழான்)

கடந்த 20 நாட்களாக முன்னெடுக்கப்பட்டு வந்த யாழ். நகரின் பிரதான வெள்ள வடிகாலினைத் தூர்வாரும் பணிகளின் முதலாம் கட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நிறைவுக்கு வந்துள்ளது.

சுமார் 520 அடி நீளமான குறித்த வடிகால் 20 நாட்களுக்குள் நேர்த்தியாகத் தூர்வாரப்பட்டுள்ளதாக யாழ்.மாநகரசபை உறுப்பினர் வ.பார்த்தீபன் தெரிவித்தார். இதேவேளை, யாழ். மாநகரத்தினைத் தூய்மைப்படுத்திய பணியாளர்களை மதிப்பளிக்கும் நிகழ்வும் மிகுதி பிரதான வெள்ள வடிகாலினைத் தூர்வாரும் இரண்டாம் கட்டப் பணிகளும் விரைவில் ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (5-4-18)

# வவுனியா மீன் சந்தையின் கழிவுநீர்
## வெளியேறுவதால் துர்நாற்றம்-மக்கள் குற்றச்சாட்டு

(நெளுக்குளம்)

வவுனியா மன்னார் வீதி குருமன்காடு சந்தியில் அமைந்துள்ள மீன் சந்தையிலிருந்து வெளியேறும் கழிவு நீரினால் அப்பகுதி எங்கும் துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் அருகிலுள்ள தேவாலயம், இந்து ஆலயம், பேருந்து தரிப்பிடம் என்பனவற்றிற்குச் செல்லும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உட்பட்டு வருவதாகவும் இதனைக்கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை எடுக்குமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மன்னார் வீதி, குருமன்காட்டு சந்தியில் அமைந்துள்ள மீன் சந்தையின் கழிவுநீர்த் தொட்டி நீர் நிரம்பி வழிகின்றமையால் கழிவுநீர் வெளியே வீதி ஓரமாக வெளியேறி வருகிறது. இதனால் குறித்த மீன் சந்தைப்பகுதி எங்கும் துர்நாற்றம் வீசிவருகிறது. அருகருகே அமைந்துள்ள கத்தோலிக்க தேவாலயம் மற்றும் இந்து ஆலயத்திற்கு செல்லும் பக்தர்கள் உட்பட பேருந்துக்காக பேருந்து தரிப்பிடத்தில் காத்திருக்கும் பயணிகளும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

எனவே இவ்வாறு மீன் சந்தையிலிருந்து வெளியேறும் கழிவுநீரினை உரிய முறையில் அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (5-4-299)



வடக்கு மாகாண விவசாய அமைச்சுக்குட்பட்ட விவசாயத் திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியாளர் (விவசாய விரிவாக்கம்) தரம் III இல் 69 ஆளணியினருக்கான நியமனம் மற்றும் வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் தரம் III மற்றும் பயிற்சித்தரத்தில் 53 ஆளணியினருக்கான நியமனங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி.பி.எஸ்.எம்.சாள்ஸ் கலந்துகொண்டு நியமனங்களை வழங்கி வைத்தார். (படம்:-சிவசாந்தன்)

# தெரு விளக்கினை ஒளிரச் செய்யுமாறு
## பொதுமக்கள் கோரிக்கை

(வரணி)

ஏ-9 வீதியில் அமைந்துள்ள கைதடி பாலத்தில் புதிதாக பொருத்தப்பட்டிருந்த தெரு மின் விளக்குகள் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக ஒளிராமல் காணப்படுகின்றன.

இதனால் இப்பகுதி இருள் சூழ்ந்து காணப்படுகின்றது. மேலும் இப்பாலத்தின் ஊடாக போக்குவரத்து மேற்கொள்வோர் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

அத்துடன் விபத்துக்கள் ஏற்படவாய்ப்பும் உள்ளது.

எனவே இந்த தெரு விளக்குகளை ஒளிரச் செய்வதற்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கையெடுக்க வேண்டும் எனப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-103)

# வயாவிளான் தனிமைப்படுத்தலில் இருந்த
## 127 பேர் சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டனர்



(யாழ்ப்பாணம்)

பாதுகாப்புப் படைகள் (யாழ்ப்பாணம்), 52 ஆவது தரைப்படைத்தலைமையகம் மற்றும் 512 ஆவது-காலாட் படைப்பிரிவின் கீழ் பராமரிக்கப்பட்டு வருகின்ற வயாவிளான் தனிமைப்படுத்தல் மையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த போய், சவுதி அரேபியா, மலேசியா, மியன்மார், எகிப்து மற்றும் ஓமான் ஆகிய நாடுகளிலிருந்து வருகை தந்த 127 பேர் இரண்டு வாரங்கள் தனிமைப்படுத்தப் படுத்தலை நிறைவு செய்து நேற்று அவர்களது வீடுகளிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

பதுளை, மொனராகலை, இரத்தினபுரி, அம்பாந்தோட்டை, கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் காணப்படும் தமது வீடுகளிற்கு செல்வதற்குரிய போக்குவரத்து வசதிகள் இராணுவத்தினரால் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டதுடன் அவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.(5-4)

# 239 கிலோ கஞ்சா மீட்பு



(முறிகண்டி)

கிளிநொச்சிப் பளை பொலிஸ் பிரிவில் 239 கிலோ கேரளக் கஞ்சா மீட்டுள்ளதாகவும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். கடற்படையினருக்குக் கிடைத்த தகவலிற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது இவை மீட்கப்பட்டதுடன், சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.வடமராட்சி கிழக்கு ஆழியவளை பகுதியில் அதிகாலை 3 மணியளவில் குறித்த சோதனை மேற்கொள்ளப்பட்டது. மீட்கப்பட்ட கஞ்சா பொதிகளையும் சந்தேக நபர்களையும் பளை பொலிஸாரிடம் கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்யப்படுவதாகவும் பளை பொலிஸார் தெரிவிக்கின்றனர். (5-4-100-316-350)

நீ செய்யும் பாவமே உன்னைக் காட்டிக் கொடுத்து விடும்.

– பைபிள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இலங்கைக்கு வருகைதந்த தேவலோகத் தூதுக்குழு - 5

*தேவலோகத் தூதுக்குழு புஷ்பக விமானத்தில் தென்பகுதி நோக்கிச் செல்கிறது. ஆனையிறவில் அமைக்கப்பட்டிருக்கும் இறந்த படையினரின் நினைவுத்தூபியை அவதானித்த பிரம்மா; இறந்த படையினருக்கு ஆனையிறவில் நினைவுத்தூபி. ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடித்தழிக்கப் படுகிறது என்றால், சித்திரகுப்தர் கணக்கைச் சரி யாக எழுதவில்லைப் போலும். இவ்வாறு பிரம்மா கூறியபோது புஷ்பக விமானம் கொழும்பின் மத்தியை அடைந்தது.*

**இந்திரன்:** நாரதரே! வடபகுதியில் எல்லோரும் முகக் கவசம் அணிந்திருக்கின்றனர். ஆனால் கொழும்பில் முகக் கவசம் அணிவதில்கூட அசமந்தம் தெரிகிறது. இதுபற்றி சுகாதாரப் பகுதியினர் அவதானிப்பதில்லையா?

**நாரதர்:** பிரம்மதேவரே! தலைக்கு மேல் வெள்ளம். சாண் ஏறினால் என்ன? முழம் ஏறினால் என்ன?

**விஷ்ணு:** நாரதா! என்ன சொல்கிறாய்.

**நாரதர்:** சுவாமி கொழும்பில் கொரோனாத் தொற்று படுவேகமாகப் பரவிவிட்டது. சுருங்கக்கூறின் கொழும்பில் கொரோனா சுணைக்கெட்டுவிட்டது.

**யமன்:** அது சரி சித்திரகுப்தா! என்ன ஆட்சிப் பீடத்தின் அமைச்சர்கள் ஆளுந்தரப்பினர் அந்தரப்படுவதுபோல் இருக்கிறது. அங்குமிங்குமாக ஓடித்திரிகின்றனர். இன்னும் சிலர் தொலைபேசியில் உரையாட வேறு சிலர் கணனிகளுடன் பேசுகின்றனர். என்ன சங்கதி.

**சித்திர:** சுவாமி ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான பிரேரணை மீதான வாக்கெடுப்பு இன்று நடைபெறவிருக்கிறது. வாக்கெடுப்பில் இலங்கை தோற்றுவிட்டால் நிலைமை மோசமாகிவிடும் என்ற பயத்திலேதான் அவர்கள் அந்தரப்படுகின்றனர்.

**யமன்:** அட சங்கதி அப்படியா?

**இந்திரன்:** நாரதரே! இன்று நடைபெறவிருக்கும் வாக்கெடுப்பில் இலங்கை அரசு வெல்லக்கூடிய சந்தர்ப்பம் உண்டா?

**நாரதர்:** சொல்ல முடியாதென்று சொல்ல முடியாது. ஆனாலும் இலங்கைக்கு எதிரான பிரேரணையை ஆதரிக்குமாறு பிரிட்டன், உலக நாடுகளிடம் கேட்டுள்ளது. இந்தியாவையும் ஆதரவு தருமாறு பிரிட்டன் கோரியுள்ளது.

**பிரம்மா:** இந்தியப் பிரதமர் மோடி என்ன சொல்கிறார்.

**நாரதர்:** பிரதமர் மோடி மௌன விரதம் இருக்கிறார். கடைசி நேரத்தில் தமிழ் மக்களுக்கு உதவுவாரா? இல்லையா? என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

**விஷ்ணு:** இந்திரா! இலங்கை-தொடர்பான தேவலோக விசாரணை எப்போது நடைபெறும்.

**இந்திரன்:** விஷ்ணு பகவானே! போர்க்குற்றம் நடத்திய பலர் இலங்கையில் இருந்து தேவலோகத்துக்கு வர வேண்டியுள்ளது. இது எப்போது நடக்கும் என்று கேட்டால், அவர்களின் கணக்கு முடியவில்லை என்கிறார் சித்திரகுப்தர்.

*(இவ்வாறு இந்திரன் கூறியதும் விஷ்ணுவுக்கு கடும் கோபம் வந்தது.)*

*யமதர்மா போர்க்குற்றம் புரிந்தவர்கள்ள யாம் விசாரிக்க வேண்டும். உடனடியாக அவர்களை எங்கள் இடத்துக்கு வரவழைத்துக் கொள்.*

*அவர்கள் அங்கு வந்த பின்பு மீண்டும் இலங்கைக்கு வருவோம். இப்போது தேவலோகத்துக்கு விரையலாம் எனக் கூற, புஷ்பக விமானம் தேவலோகம் நோக்கி விரைந்தது. (முற்றும்)*

# நல்லூரில் போராட்டம் நடத்தும் நபர்களுக்கும் மாநகர உறுப்பினர்களுக்கும் இடையே முறுகல்

(யாழ்ப்பாணம்)

நல்லூரில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக போராட்டம் நடத்தும் நபர்களுக்கும் மாநகர சபை உறுப்பினர்களுக்கும் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நல்லூரில் யாழ்.மாநகர சபைக்கு சொந்தமான காணியில் அனுமதி பெறாது கொட்டகை அமைத்து நேற்று முன்தினம் காலை முதல் உணவு தவிர்ப்பு போராட்டம் ஒன்று இடம்பெற்று வருகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளினாலும் ஏனைய தமிழ் ஆயுத குழுக்களாலும் கடத்தப்பட்டு, கொல்லப்பட்டோருக்கு நீதி வேண்டும் என வலியுறுத்தி யாழ். சிவில் சமூக அமைப்பு எனும் குழுவினரால் குறித்த அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் நேற்றைய தினம் குறித்த இடத்தில் அனுமதி பெறப்படாது கொட்டகை அமைக்கப்பட்டமை தவறு எனவும், உடனடியாக நேற்று இரவிற்குள் அகற்றுமாறும் தெரிவித்து யாழ்ப்பாண மாநகர முதல்வரின் எழுத்து மூலமான கடிதம் ஒன்றினை வழங்குவதற்கு மாநகர சபை உறுப்பினர் மற்றும் உத்தியோகத்தர்கள் சென்றிருந்தனர்.

முதல்வரின் எழுத்து மூலமான கடிதத்தினை மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன் வாசித்து காண்பித்தபோது போராட்டக்காரர்களுக்கும் மாநகர சபை உறுப்பினர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது குறித்த இடத்திற்கு பொலிஸார் வருகைதந்து இரு தரப்பினரையும் சமாதானப்படுத்தியதோடு நீதிமன்ற அனுமதி பெற்றால் மாத்திரமே இவர்களை இந்த இடத்தில் இருந்து அப்புறப்படுத்த முடியும் என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3,33,136)

### பொ - பொ வரையான எழுச்சிப் பேரணி

# பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மே மாதம் 3 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

(கரணவாய்)

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணி தொடர்பாக பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பாக பிரதிவாதிகள் சார்பில் மேலதிக நடவடிக்கை எடுக்க கூடாது என தாக்கல் செய்யப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்காளிகளான பொலிஸார் சார்பில் பிரதம மன்றாடினார் அதிபதி மாதினி விக்னேஸ்வரன், ருவான் குணசேகர மாதவ தென்னக்கோண் ஆகியோர் ஆஜராகி இருந்தனர். பிரதிவாதிகள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன், திருக்குமரன், சயந்தன், மணிவண்ணன் உள்ளிட்ட 11 சட்டத்தரணிகள் முன்னிலை யாகியிருந்தனர்.

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பொலிஸார் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மேற்கொண்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளக்கூடாது என பிரதிவாதிகள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கு பொலிஸார் சார்பில் பிரதி மன்றாடியார் பூர்வாங்க ஆட்சேபனை தெரிவித்தார்.

அரச தரப்பின் பூர்வாங்க ஆட்சேபனையைத் தொடர்ந்து எழுத்து மூல ஆட்சேபனையை வழங்க அரசதரப்பு கேட்டுக் கொண்ட தற்கிணங்க இருதரப்பும் எழுத்து மூல சமர்ப்பணங்களை வழங்க 4 வார கால அவகாசம் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இருதரப்பு பூர்வாங்க ஆட்சேபனைகள் தொடர்பாக மே மாதம் 3ஆம் திகதி நீதிமன்றம் உத்தரவு ஒன்றை பிறப்பிக்கும் என மன்று அறிவித்துள்ளது. (ம-3,33,60)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 24 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**வவுனியா பிரதேசத் தில்** சமணன்குளம் கிராமம், சமயபுரம் கிராமம், வீரபுரம் கிராமம் ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத் தில்** பூவரசங்குளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## தவறுகளையும் வாழ்த்து

❖ இரக்கத்தால் பிறருக்கு நன்மை செய்வது நல்லது. ஆனால் இறைவனின் படைப்பான அனைத்து உயிர்களுக்கும் பணி செய்வது மிக நல்லது.

❖ மனித வடிவம் கொண்ட அனைத்து உயிரையும் வழிபடுங்கள், இறைவனை அனைத்து வடிவத்திலும் வழிபடுவதே நன்மை பெற நல்ல வழியாகும்.

❖ விருப்பத்திற்கும், கோபத்திற்கும் அடிமையானால், உண்மையான சுதந்திரத்தின் இன்பத்தை உணர முடியாது என்பதால், அவற்றை தவிர்ப்பது நல்லது.

❖ கடவுளின் குழந்தைகளாகிய மனிதர்களுக்குத் தொண்டு செய். மனிதர்களுக்கு தொண்டு செய்வதன் மூலம் கடவுளுக்கு தொண்டு செய்தவனாகிறாய்.

❖ கடவுள் மீது நம்பிக்கை வைத்து துன்பப்படுபவர்களுக்கு இரக்கம் காட்டினால் உங்களுக்குத் தேவைப்படும் உதவி நிச்சயம் வந்தே தீரும்.

❖ நீ செய்த தவறுகளை வாழ்த்து. அந்தத் தவறுகள், நீ அறியாமலேயே உனக்கு வழிகாட்டும் தெய்வங்களாக இருந்திருக்கின்றன.

# ஊடக சுதந்திரம் என்பது

# ஜனாதிபதி வழங்கும் அனுமதிப்பத்திரம் அல்ல

## அநுரகுமார தெரிவிப்பு

**(கொழும்பு)**

**ஜனாதிபதி கோட்டாபய ஊடகங்கள் தொடர்பில் விடுத்துள்ள எச்சரிக்கைகள் ஊடக நிறுவனங்களையும் ஊடகவியலாளர்களையும் இலக்கு வைக்கும் அச்சம் தரும் பயங்கரமான சம்பவங்கள் மீண்டும் இடம்பெறப்போகின்றனவா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளது என ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.**


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊடக சுதந்திரம் என்பது தான் வழங்கும் அனுமதிப் பத்திரம் இல்லை என்பதை ஜனாதிபதி உணர வேண்டும்.


மனித உரிமைகளையும் அபிவிருத்தியையும் உறுதி செய்வதற்காக நீண்ட கால போராட்டத்தின் ஊடாக மக்கள் பெற்றுக்கொண்டதே ஊடக சுதந்திரமாகும்.

ஜனாதிபதி ஊடகங்கள் மீது தான் செல்வாக்குச் செலுத்த முயலவில்லை என தெரிவித்துள்ளார், இதன்மூலம் தெரியவருவது என்னவென்றால், அவரால் அப்படி செயற்பட முடியும் என்பதே ஆகும்.

ஜனாதிபதிக்கு அவ்வாறு செயற்படுவதற்கான அதிகாரமில்லை. ஜனாதிபதி இரண்டு வகையான அணுகுமுறையை பின்பற்றுகின்றார். ஒன்று தன்னைப் பாராட்டும் பத்திரிகையாளர்களின் தோளில் கைபோடுகின்றார். தன்னை விமர்சிக்கும் பத்திரிகையா



ளர்களை அச்சுறுத்துகின்றார் எனவும் ஜே.வி.பியின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.(நி-4)



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ரியர் அட்மிரல் ருவன் பெரேராவை இலங்கை கடற்படையின் பிரதானியாக நியமித்துள்ளார். 2021 மார்ச் 21 முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

# சுகாதார விதிகளை மீறிய அறுவர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய 6 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

இதற்கமைய கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி முதல் இதுவரையில் தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய 3,381 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாட்டில் தனிமைப்படுத்தல் தொடர்பான சுற்றிவளைப்புகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன.

எதிர்வரும் பண்டிகைக்காலங்களில் அனைவரும் சுகாதார நடைமுறைகளை உரிய முறையில் பின்பற்ற வேண்டும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண குறிப்பிட்டார். (நி-4)

# சிங்கராஜ வனத்திற்குள்ளும் புகுந்தது சீனா

(கொழும்பு)

சிங்கராஜ வனத்துக்குள் இரண்டு பாரிய நீர்நிலைகள் அமைக்கப்படவுள்ளதாகவும் இதற்காக சீன நிறுவனத்துடன் இணைந்து திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தங்காலை, வீரகெட்டிய மற்றும் பெலியத்த பிரதேசங்களுக்கு குடிநீர் பெற்றுக் கொள்ளும் முகமாக இந்த திட்டம் செயற்படுத்தப்பட உள்ளது.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இத்திட்டம் தயாரிக்கப்பட்டு சீன நிறுவனத்திற்கு ஒரு தொகை நிதியும் வழங்கப்பட்டிருந்ததாகவும் கடந்த ஐந்து வருடங்களில் அது செயற்படுத்தப்படவில்லை எனவும் தெரிவித்த அமைச்சர், அத்திட்டத்தை மீள ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் கூறினார்.

சிங்கராஜ வனத்திற்குள் ஒரு நீர்நிலை சுமார் 5 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட உள்ளது. இவ்வாறு இரண்டு நீர்நிலைகள் அமைக்கப்படவுள்ளன. இதன்போது இடம்பெறும் வன அழிவுக்கு பதிலாக 50 தொடக்கம் 100 ஏக்கரில் மரம் நடுவதற்கு நாம் இணக்கம் தெரிவித்துள்ளோம் என சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (நி-4)

# மரண தண்டனைக் கைதி துமிந்தவிற்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் சனத்

(கொழும்பு)

மரண தண்டனை கைதி துமிந்த சில்வாவிற்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டும். அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இவருக்கு மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்தில் அரசியல் பழிவாங்கலுக்குட்பட்டவர்கள் அனைவருக்கும் நியாயம் வழங்கப்பட வேண்டும் என கிராமிய, பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்ட இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவிற்கு மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டமை குறித்து பாரிய சந்தேகம் காணப்படுகின்றது. தீர்வு வழங்கப்படுவதற்கு முன்னர் அரசியல்வாதிகள் நீதிமன்ற தீர்ப்பு குறித்து கலந்துரையாடியமை குரல் பதிவுகள் ஊடாக வெளியாகின.

துமிந்த சில்வாவிற்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் என ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஜனாதிபதியிடம் எழுத்து மூலமாக கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

மரண தண்டனை தீர்ப்பு அரசியல் காரணிகளையும் தனிப்பட்ட பழிவாங்கலையும் அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்டுள்ளது என்ற சந்தேகம் காணப்படுகிறது. ஆகவே மரண தண்டனை தீர்ப்பினை மீள்பரிசீலனை செய்யுமாறும் கோரிக்கை விடுத்துள்ளோம் என அவர் தெரிவித்தார். (நி-4)

# சஹ்ரானின் அடிப்படைவாதக் கொள்கைக்கு மக்கள் விடுதலை முன்னணி ஈர்க்கப்பட்டுள்ளதா?

(கொழும்பு)

தற்கொலை குண்டுதாரி சஹ்ரானின் அடிப்படைவாத கொள்கைக்கு மக்கள் விடுதலை முன்னணியின் ஒரு சில உறுப்பினர்கள் ஈர்க்கப்பட்டுள்ளார்களா? என்ற சந்தேகம் காணப்படுகிறது என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

மாளிகாகந்த விகாரையில் இடம்பெற்ற மத வழிபாட்டில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலின் தற்கொலை குண்டுதாரிகளின் தந்தையான இப்ராஹிம் மக்கள் விடுதலை முன்னணியின் தேசிய பட்டியல் உறுப்பினராக செயற்பட்டுள்ளார்.

இவ்விடயம் குறித்து விசாரணைகளில் வாக்குமூலம் வழங்க நேரிடும் என்பதில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க அச்சம் கொண்டுள்ளார்.

முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் இப்ராஹிம் என்பவர் மக்கள் விடுதலை முன்னணியின் தேசிய பட்டியல் உறுப்பினராக செயற்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தற்கொலை குண்டுதாரி சஹ்ரானின் கொள்கைக்கு மக்கள் விடுதலை முன்னணியின் ஒரு சில உறுப்பினர்கள் ஈர்க்கப்பட்டுள்ளதாகவும் சந்தேகம் காணப்படுகிறது.

3 சதவீத மக்களாணையினை பெற்றுள்ள மக்கள் விடுதலை முன்னணிக்கு இனி மக்களின் ஆதரவு ஒருபோதும் கிடைக்கப் பெறாது. ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையின் யோசனைகளை துரிதகரமாகச் செயற்படுத்த உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார். (நி-4)

# சீன தடுப்பூசி சீனர்களுக்கே முன்னுரிமை

(கொழும்பு)

சீனா தயாரித்த சினோபாம் கொரோனாத் தடுப்பூசிகள் இலங்கையிலுள்ள சீன பிரஜைகளுக்கே முதலில் வழங்கப்படுமென இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோ புள்ளே இதனை உறுதிப்படுத்தியுள்ளார். (நி-4)

## ஆண் ஒருவர்...

கண்டி பகுதியைச் சேர்ந்த 45வயதான நபர் ஒருவரே நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-3,30)

## வட மாகாணத்...

அவர்களில், வடமாகாணத்தில் நான்கு பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலைத் தரப்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி, யாழ். மாவட்டத்தில் மூன்று பேருக்கும் மன்னார் மாவட்டத்தில் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,18)

## யாழ்ப்பாணத்தில்...

உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் சுதுமலையைச் சேர்ந்த 63 வயதுடைய வயோதிபப் பெண்ணே இவ்வாறு கோவிட்-19 நோயால் உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண்கடந்தவாரம்யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மருத்துவ விடுதியில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய நிலையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட திடீர் மூச்சுத் திணறலையடுத்து அதிதீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டார் என்றும் கூறப்பட்டது.

மேலும்வயோதிபப்பெண்ணுக்கு நேற்று முன் தினம் மருத்துவ சேவை வழங்கிய அதி தீவிர சிகிச்சை பிரிவு தாதிய உத்தியோகத்தர் ஒருவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். (ம-3,18)


தன நிதானய
திகதி - 2021.03.22
சீட்டிழுப்பு இலக்கம் - 471
P 01 02 14 26
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 22.03.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2729
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 19 35 57 58
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2021/03/22
சீட்டிழுப்பு இலக்கம் 4434
ஆங்கில எழுத்து G
வெல்லப்பட்ட இலக்கங்கள் 9 9 9 9 1 3
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 22/03/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0796
வெற்றி எழுத்து Y
சுப்பர் இலக்க 04
வெற்றி இலக்கங்கள் 39 45 63 71

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1672 திகதி 2021.03.22
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 02 58 62 84
தேசிய லொத்தர் சபை


## 5 பேர் பலி...

டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 551 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## முடிவு இன்று...

இதேவேளை, இன்று இடம்பெறவுள்ள வாக்கெடுப்பில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் பெரும்பாலும் வெற்றியடையும் நிலையே காணப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பெரும்பாலான நாடுகள் இலங்கைக்கு எதிராக வாக்களிக்கத் தீர்மானித்துள்ளதாக அந்தத் தகவல்கள் கூறுகின்றன.(ம-3)

## ராஜிதவிடம்...

ராஜித சேனாரத்ன மற்றும் அவரது மகன் பாராளுமன்ற உறுப்பினர் சத்துர சேனாரத்ன ஆகியோர் நேற்று கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவில் முன்னிலையாகினர்.

நேற்று முற்பகல் முன்னிலையாகிய அவர்களிடம் தொடர்ந்து விசாரணை முன்னெடுக்கப்பட்டது.

ஊடகவியலாளர் சுஜீவ கமகே, (வயது-62) குழுவொன்றினால் கடத்தப்பட்டு அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கிய சம்பவம் தொடர்பில் இருவர் மீதும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவே ராஜித சேனாரத்ன மற்றும் சத்துர சேனாரத்ன ஆகியோரிடம் வாக்குமூலம் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

*(இது தொடர்பான மற்றொரு செய்தி உள்ளே)*

## ஐ.நாவில்...

நேற்றையதினம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் இந்த வாத பிரதிவாதங்கள் தொடர்பான வாக்கெடுப்பு இன்றைய தினம் நடத்தப்படவுள்ளது.

GMT நேரப்படி ஒன்பது மணிக்கு இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு எதிராக வாக்கெடுப்பு நடத்தப்படும்.

ஆறு நாடுகளினால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனையை இலங்கை முழுமையாக நிராகரித்துள்ளது.

சீனா, ரஷ்யா, பிலிப்பைன்ஸ் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் அந்த யோசனைக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றன.

இதேவேளை இந்த யோசனைக்கு எதிராக வாக்களிக்கவுள்ளதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது. (ம-3)

## சர்வதேச...

புதிதாக உருவாக்கப்படும் அரசியலமைப்பிலும் சேர்க்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தங்கள் இராணுவத்தை பாதுகாக்க மற்ற நாடுகள் சட்டங்களை வகுத்துள்ளன என்றும் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் சுட்டிக் காட்டினார்.

அதன்படி கொண்டுவரப்படும் புதிய சட்டதிட்டங்களின்படி இராணுவத்தினர் மீது வழக்குத் தாக்கல் செய்யவோ அல்லது அவர்களை தண்டிக்கவோ முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது அமர்வில் இலங்கை தொடர்பான முடிவைப் பொருட்படுத்தாமல் தொடர்புடைய சட்டங்கள் அரசியலமைப்பில் சேர்க்கப்படும் என்றும் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார். (ம-3)

## காணாமல் ஆக்க...

பகுதியைச் சேர்ந்த கனகையா றஞ்சனா மூர்த்தி (வயது-63) என்ற தந்தையே மரணமடைந்துள்ளார்.

வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டு வரும் சுழற்சிமுறை உணவு தவிர்ப்பு போராட்டத்திலும் குறித்த தந்தை கலந்து கொண்டு தனது மகனை கண்டுபிடித்து தர போராடியிருந்தார்.

இந்நிலையில் மகனை காணாமலேயே அவர் மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,299)

## அரசு படுகுழிக்...

இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களின் அபிலாசைகளை படுகுழிக்குள் தள்ளியுள்ளதென ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் தற்போதைய செயற்றிட்டங்கள் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## இரு மாதங்...

மாதங்களுக்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்." இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் நிமல் ஜி.புஞ்சிஹேவா தெரிவித்தார்.

மாகாண சபைகளுக்கான தேர்தலை இவ்வருடத்துக்குள் நடத்தி முடிக்க முடியுமா? என எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"மாகாண சபைகளுக்கான தேர்தலை பழைய சட்டத்தின் பிரகாரமா அல்லது புதிய சட்டத்தின் பிரகாரமா நடத்துவது என்பது தொடர்பில் முடிவெடுத்து அதற்குத் தேவையான சட்டத் திருத்தத்தை அரசு பாராளுமன்றம் ஊடாக மேற்கொள்ள வேண்டும்.

மாகாண சபை பொறிமுறை இயங்கினாலும் மக்கள் பிரதிநிதித்துவம் இல்லை. எனவே, மக்கள் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட வேண்டும். அதற்காகவே விரைவில் சட்டத் திருத்தத்தை செய்து தேர்தலை நடத்த வேண்டும் என்ற யோசனையை தேர்தல் ஆணைக்குழுவும் முன்வைத்துள்ளது" என்றார். (ம-3)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


# 10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம்

(கொழும்பு)

10 ஆயிரம் பயிற்சி பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அவர்கள் அனைவரும் இன்று (நேற்று) முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

நல்லாட்சி அரசாங்கத்தினால் பயிலுநர்களாக இணைத்துக் கொள்ளப்பட்ட 14 ஆயிரம் பயிற்சிபட்டதாரிகளில் 10 ஆயிரம் பேர் அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக அமைச்சர் ஜனக்க பண்டார தென்னக்கோன் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து, அவர்களது பயிற்சிக் காலம் நிறைவுபெற்ற நிலையில், இந்த நியமனக் கடிதங்கள் மாவட்ட செயலக மட்டத்தில் இன்று (நேற்று) முதல் வழங்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார். (ம-3)


காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை, நவாலி வீதி, மூத்த விநாயகர் கோவில் வீதி மெயின் றோட்டில் 03 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. 11/2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
தரகர் தேவையில்லை.
காணி பார்வையிடும் நேரம்
காலை 9.00 தொடக்கம் மாலை 6.00 மணிவரை.
☎-077 288 0152
(6275)

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1230
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 22.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 120,410,955
வெற்றி இலக்கங்கள் 09 35 64 71
ஆங்கில எழுத்து L
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 3560
வர்ணம் : கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 22.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 32,819,620
வெற்றி இலக்கங்கள் 01 22 31 54
ஆங்கில எழுத்து V
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் 49,21,033/=
திகதி : 22.03.2021
வெற்றி வாரம் : 3111
வர்ணம் : மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 21 45 49 50
துலாம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,723,840

SUPER BALL சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 1404
சீட்டிழுப்பு திகதி 22/03/2021
நிறம் ஊதா
தினம் திங்கட்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் W 28 34 40 73
அடுத்த சுப்பர் ஜக்பொட் 50,205,135/=
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1743
சீட்டிழுப்பு திகதி 22.03.2021
வெற்றி இலக்கங்கள் 18 27 37 55
ஆங்கில எழுத்து Z
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 23,307,828
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

**DIPLOMA IN SPOKEN ENGLISH (WITH GRAMMAR)**



O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விஷேட Spoken English Training கொழும்பு பிரபல Spoken English ஆசிரியரால் வகுப்புக்கள் நடத்தப்படும். (6281)

☎-077 796 9540

UDUVIL, JAFFNA.

## பணிநிலை வேண்டுகை

நோபள் இன்ரநசனல் பேப்பர்ஸ் லங்கா (தனியார்) கம்பனி
கைத்தொழிற்பேட்டை, அச்சுவேலி.

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையில் இயங்கும் காகித உற்பத்தி தொழிற்சாலைக்கு தொழிற்சாலை தொழிலாளருக்கான வேலை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுடையவர்கள் 25/03/2021 அன்று தொழிற்சாலையில் நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு தேசிய அடையாள அட்டையுடன் காலை 10.00 மணிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். (6286)

மேலதிக விபரங்களுக்கு

**076 141 9329**

## காணி விற்பனைக்கு

கொக்குவில் பிரம்படி 2 ஆம் ஒழுங்கையில் 2 1/2 பரப்புக் காணி வெட்டுக்கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. (6298)

**076 702 3565**

In partnership with idp IELTS Register Here
Official IDP IELTS Referral Agent

Looking for a Desired **BAND SCORE in IELTS EXAM**



FREE ADMISSION

WHAT WE COVER
- IELTS Tips
- IELTS Exam tips by IELTS Experts
- Individual discussion

& College/University Admission For UK, Canada, USA and Australia
Career Guidance and other services

ApplyBoard

- Applyboard country representative Live Speaking in English & Tamil
- Individual discussion

27th March 2021
Green Grass Hotel
1.00 pm - 5.00 pm
Contact
0777516816
0741887878

Limited Participants !!!
Refreshment Will Be Provided (6291)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## சேல்ஸ்மான் தேவை

எமது புடவை நிறுவனத்துக்கு புடவை வியாபாரம் பழகியவர்களும் பழக ஆர்வம் உள்ளவர்களும் (ஆண்கள்) தேவை.

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்
41, பெரியகடை யாழ்ப்பாணம். (6299)

## ஆசிரியர் தேவை

கோண்டாவிலில் இயங்கும் தொழிற்கல்வி நிறுவனத்தில் கேக் மேக்கிங் கோர்ஸ் (Cake Making Course) கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவை. (6276)

**076 057 9999**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பலாலி வீதி, கோண்டாவில் கொட்டைக்காடு வீதியில் 18 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.)
பலாலி வீதியில் இருந்து 120 மீற்றர் தூரத்தில் காணி உள்ளது. (6300)

**077 623 4204**
**077 505 8561**
**077 235 2656**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நல்லூர் கோயில் வீதியில் மெயின் றோட்டுடன் கிளிகடைச் சந்திக்கு அருகாமையில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (6300)


(நல்லூர் முருகன் ஆலயத் திலிருந்து 250 மீற்றர் தூரம்.)

**077 468 3354**
**077 203 6402**

# மரண அறிவித்தல்

## கந்தையா கணபதிப்பிள்ளை

(ஓய்வுநிலை பிரதி அதிபர் - யா/ அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்)



அல்வாய் கிழக்கு, தென்னியம் பிள்ளையைப் பிறப்பிடமாகவும் "இலக்கியவாசா", அல்வாய் கிழக்கை (கலட்டி) வசிப்பிட மாகவும் கொண்ட கந்தையா கணபதிப்பிள்ளை (ஓய்வுநிலை பிரதி அதிபர் - யா/ அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்) நேற்று (22.03.2021) திங்கட் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பத்மாவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, நவரத்தினம், பொன்னம்மா மற்றும் கனகம்மா காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு, நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் அருந்ததி (கொழும்பு), புனிதமதி (லண்டன்), வளர்மதி, ஐங்கரன் (ஆயுள்வேத வைத்தியர் - சித்த மத்திய மருந்தகம், பருத்தித்துறை), காந்திமதி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுபேந்திரன் (லண்டன்), மகேந்திரன் (ஓய்வுநிலை அலுவலக உதவியாளர் - காணிப்பதிவகம், பருத்தித்துறை), தமிழ்ச்செல்வி (முகாமைத்துவ உதவியாளர் - யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் மாமனாரும் ஆனந்தி, ஆதவன், பிரியங்கா, துவாரகா, திவ்யா, பவித்ரா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (23.03.2021) செவ்வாய்க் கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-1791)

"இலக்கியவாசா",
அல்வாய் கிழக்கு.

தகவல்:-
குடும்பத்தினர்

## சிறுநீரகம் தேவை

44 வயது நபருக்கு O+ குருதி வகை உடைய சிறுநீரகம் தேவை.
(சன்மானம் வழங்கப்படும்.) (C-1790)

**075 624 6979**
**077 082 6547**

## புதிய பிரிவு A/L 2023 கணக்கீடு

**திரு. க. பா. பாலகஜன்**
M.Com (Hons), B.Com (Jaf.),H.N.Dip.-in. ACC.,Dip.-in-Edu.

பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்
கொழும்புத்துறை - சனி, ஞாயிறு
2.15 p.m - 3.30 p.m
கந்தர்மடம் - சனி, ஞாயிறு
7.00 a.m - 8.00 a.m
Zoom class - திங்கள்,வெள்ளி
7.30 p.m - 8.30 p.m

A/L 2021 & DAY, A/L 2022 வகுப்புகளும் நடைபெறு கின்றன.

புதிய அனுமதிகளுக்கு அழையுங்கள். (6215)

**077 216 8884**

## அண்ணா EXPRESS
விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்
லண்டன் 1000/=
070 3305500
077 888 9388 (C-1768)

| | | | |
|---|---|---|---|
| 976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு |

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-1767)

0768226240 DHL

# சேவை நலன் பாராட்டு



திருமதி
**அனிற்றா கலையரசி செல்வகுமார்** [SLTS - I]
(வணிகமாணி கல்வி டிப்ளோமா)

ஆசிரியப் பணியில் முப்பது இன்றுடன் இருபத்தெட்டு வருடங்கள் இக்காலமதில் எமது கல்லூரியில் பதினொரு வருடங்கள்
( 10.02.2010 – 23.03.2021 )

ஆரம்பப் பிரிவில் ஆரம்பக் கல்விதனை அமுதென ஊட்டி, பகுதித் தலைவராகவும் இருந்து அளப்பரிய சேவைபுரிந்து இன்றுடன் ஓய்வுபெறும் தங்களின் சேவையினை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். (6293)

அதிபர், ஆசிரியர் மற்றும் கல்விசாரா ஊழியர் நலன்புரிச் சங்கம்
யா / இணுவில் மத்திய கல்லூரி

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.